
செப்டம்பர் 2003 ❑ ரூ. 5.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



**கோக் - பெப்சி போதையில் ஆட்சியாளர்கள்**




**பங்காளிகளின் பாசிசத் தாக்குதல்**

படிப்பகம்



திருச்சியில்....

## இன்றைய தோல்வியாளர்களே... நாளைய வெற்றியாளர்கள்!

# புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சார இயக்கம்

**வ**ழக்குகள், நள்ளிரவு கைதுகள், கருப்புச் சட்டத்தை ஏவி வேலை நீக்கம் செய்வது, முதலான பல வழிகளில் தமிழக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டம் பாசிச ஜெயா அரசால் கொடூரமாக ஒடுக்கப் பட்டது. இந்த அடக்குமுறையைப் பாராட்டி உச்சி மோந்து 'வேலை நிறுத்தம் செய்வதற்கு அரசு ஊழியர்களுக்கு உரிமை கிடையாது'என்று மமதையோடு அறிவித்துள்ளது உச்ச நீதிமன்றம். இந்த அறிவிப்புக்கு எதிராக 'பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்' என்ற கோரிக்கையோடு துரோகத் தொழிற்சங்கங்களும், எதிர்க்கட்சிகளும் முடங்கிவிட்டன.

இந்நிலையில், அரசு ஊழியர் ஆசிரியர்களின் போராட்டத்தின் மூலம் கிடைத்த படிப்பினைகளைக் கொண்டு பாசிச ஜெயா அரசுக்கு எதிராகவும், நீதிமன்ற பாசிசத்துக்கு எதிராகவும் சட்டவாத வழிகளைத் தாண்டி உழைக்கும் மக்களின் அனைத்து தரப்பினரும் வீதியில் வந்து போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டுள்ளன. பொதுக்கூட்டம், தெருமுனைக் கூட்டம், வீடுவீடாக சென்று மக்களிடம் துண்டறிக்கை விநியோகித்து விவாதிப்பது, சுவரொட்டி, தட்டிகள் கட்டுவது முதலான பல வழிகளிலும் இப் பிரச்சார இயக்கம் அரசு ஊழியர்கள் மற்றும் உழைக்கும் மக்களிடையே வீச்சாகக் கொண்டு செல்லப்பட்டு வருகின்றது.

**திருச்சி உறையூரில்** கடந்த 16-ஆம் தேதி 'வேலைநிறுத்த உரிமை பறிப்பு; நீதிமன்ற பாசிசத்தை முறியடிப்போம்' என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனின் பொதுச் செயலர் தோழர் நாராயணசாமி தலைமை தாங்க, வி.வி.மு. தோழர் சிவகாமு, கர்நாடக உயர் நீதிமன்ற வழக்குரைஞர் பாலன், ம.க.இ.க. மாநில பொதுச்செயலர் தோழர் மருதையன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியில் ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தை விளக்கி 12,000 துண்டறிக்கைகள் ஒவ்வொரு வீட்டிற்கும் விநியோகிக்கப்பட்டது. 'பாசிச ஜெயாவை ஜெயிக்க முடியாதா?' என்ற வெளியீடு போலீசு நிலையங்கள் உட்பட அனைத்து அரசு ஊழியர்களிடமும் கொண்டு செல்லப்பட்டது. இப்பிரச்சாரங்களின் மூலம் பொதுக்கூட்டத்திற்கு திரண்டிருந்த அரசு ஊழியர்களும், உழைக்கும் மக்களும் ஓட்டு பொறுக்கும் கட்சிகளுக்கிடையே இந்த இயக்கம்தான் தங்களுக்கு நம்பிக்கையளிப்பதாகக் கூறி ஆதரவளித்தனர்.

**ஜெயங்கொண்டம்** காந்தி பூங்கா கடை வீதியில் ஆகஸ்டு 5-ஆம் தேதி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி தோழர். கதிரவன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ம.க.இ.க. இணை செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்ற, ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது. ஓட்டுக் கட்சிகளே வியக்கும் வண்ணம் திரளான மக்கள் கூடியிருந்து ஆதரவளித்தனர்.

**விருதுநகரில்** ஆகஸ்டு 9-ஆம் தேதியன்று பு.மா.இ.மு. மற்றும் வி.வி.மு. அமைப்புகள் இணைந்து பொதுக் கூட்டம் நடத்தின. தோழர் இன்னாசிராஜ் தலைமையில் தோழர் காளியப்பன் சிறப்புரை நிகழ்த்தினார். இறுதியில் ம.க.இ.க. தோழர்களின் கலைநிகழ்ச்சி எழுர்சியுடன் நடைபெற்றது.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



இப்போது விற்பனையில்....
முசுலீம்கள் குறித்து அம்பேத்கர்
- டாக்டர் ஆனந்த் தெல்தும்ப்டே
புதிய ஜனநாயகம் வெளியீடு விலை ரூ. 50
அம்பேத்கரைப் பற்றி இந்துத்துவவாதிகள் பரப்பிவரும் பதினொரு கட்டுக்கதைகளும் அவை குறித்த உண்மை விவரங்களும் அடங்கிய நூல்
நூல் கிடைக்குமிடம்:
கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

இதழ் 11

செப்டம்பர் 2003

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

அட்டை ஓவியம்:
முகிலன்

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


## நீதிமன்ற பாசிசம்: சட்டவாதத்தில் சிக்கிய சங்கங்கள்

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு ஒடுக்கப்பட்ட அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை இப்படித்தான் துவம்சம் செய்கிறது ஜெயலலிதா அரசு. இந்த அநீதி, அக்கிரமத்தை வானளாவப் புகழ்ந்து பாராட்டியிருக்கின்றன உயர் நீதி, உச்ச நீதிமன்றங்கள். ''நீதி'' மன்றங்கள் என்று தவறாக அழைக்கப்படும் இந்த அநீதி மன்றங்களை அதிகம் போனால் வழக்காடு மன்றங்கள் என்றழைப்பதுதான் சரியாக இருக்கும். இந்த வழக்காடு மன்றத்திடம் முறையீடு செய்வதற்கே கூட அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் அஞ்சி நடுநடுங்கும்படியும் ஆட்சியாளர் காலடியில் சரணடைந்து மன்னிப்புக் கோரும்படியும் நிர்பந்திக்கப்பட்டனர். அப்படி இருந்தும் வேலை நிறுத்தம் செய்வதன் மூலம் அரசு நிர்வாகத்தைப் பணயக் கைதியாக்குகிறார்கள் என்று ''நீதி'' மன்றங்கள் கூறுவது வக்கிரமும் வடிகட்டிய பொய்யுமில்லையா?

''அநீதி இழைக்கப்பட்டிருந்தாலும், நியாயமான காரணங்களுக்கே என்றாலும் வேலை நிறுத்தம் செய்வதற்கான அடிப்படை உரிமையோ, சட்டபூர்வ, தார்மீக உரிமையோ கிடையாது. சட்டபூர்வ உரிமைகள் தவிர வேலை நிறுத்தம் செய்து சமுதாயத்தையே பணயக் கைதியாக வைக்கும் உரிமையைக் கோர முடியாது. ஒரு ஆயுதம் என்கிற முறையில் குழப்பத்தையும் நிர்வாகச் சீர்குலைவையும் விளைவிக்கும் வகையில் மிகவும் கேடாகப் பயன்படுத்தப்படுகிறது.''

''ஒரு ஆசிரியரின் வேலைநிறுத்தத்தால் கல்வித்துறை முழுவதும் பாதிக்கப்படுகிறது. பல மாணவர்கள் தங்கள் தேர்வுகளில் பங்கேற்பதைத் தடுத்து, இறுதியாக அவர்களின் எதிர்காலத் தொழிலையே பாதிக்கிறது. மருத்துவர்களின் வேலை நிறுத்தத்தால் அப்பாவி நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள்; போக்குவரத்து ஊழியர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் முழு சமூகத்தின் செயல்பாடுகள் நின்று போகின்றன; தொழில்கள் பாதிக்கப்படுகின்றன'' என்று சமூகத்தின் பொது நலனுக்காக வாதிடுவதைப் போல முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறது ''நீதி'' மன்றம்.

''பெரும் அளவிலான வேலையற்றவர்கள், ஏராளமான தகுதிவாய்ந்த நபர்கள் அரசாங்கத் துறைகளில் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் வேலை பெறுவதற்கு ஆவலுடன் காத்திருக்கும் ஒரு சமூகத்தில் வேலைநிறுத்தங்கள் என்பவை சமத்துவ அடிப்படையில் நியாயமானதாக இருக்க முடியாது'' என்று நீலிக்கண்ணீர் வடித்துள்ளது உச்ச நீதிமன்றம்.

இத்தகைய உபாசனைகளை நீதிபதிகள் தங்களுக்குத் தாமே பொருத்திப் பார்க்க வேண்டும். நாட்டில் 40 சதவீதத்துக்கு மேலான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும்போது, எலிக்கறியும் காய்ந்த கொட்டைகளையும் காட்டுக் கிழங்குகளையும் தின்று உயிர்வாழும் போது, அவையும் கிடைக்காமல் பட்டினியால் சாகும்போது, ஒவ்வொரு நீதிபதியும் பல பத்தாயிரம் ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள், ''மினரல் வாட்டர்'' தான் குடிக்கிறார்கள். இவையின்றி அரசு செலவில் இலவச மாளிகைகள், அவற்றுக்கு உள்ளலங்காரம், தொலைபேசி செலவு, மின்சார செலவு, குளுகுளு வாகனங்கள் அவற்றுக்கு எரிசக்தி என்று ஒவ்வொரு நீதிபதியும் லட்சக்கணக்கில் செலவு செய்து சொகுசு வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்தச் சதிகளில் கொஞ்சமாவது குறைத்துக் கொள்வதற்கு சமூக நலன் கருதி ''நீதிபதிகள்'' சம்மதிப்பார்களா? ஜெயலலிதா அரசுக்காக வாதாடும் வேணுகோபால் போன்ற வழக்கறிஞர்கள் ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்துக்கும் மேல் சம்பளம் பெறுகிறார்கள். இதுமட்டும் சமத்துவ அடிப்படையிலான நீதியாகிறதா?

ஆனால், ஒருதலைப்பட்சமாக நடந்த உரிமைப் பறிப்புக்கு எதிராக அமைதியான, சட்டபூர்வமான முறைகளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட பணியாளர்களைப் பார்த்து கறுப்பு அங்கி அணிந்த வேதாளங்கள் இப்படி உபதேசிக்கின்றன. ''தற்போதுள்ள நிலைமையில் உரிமைகள் பற்றிய உணர்வு இருந்தால் மட்டும் போதாது. நமது கடமைகள், பொறுப்புகளையும் முழுமையாக அவற்றை நிறைவேற்றும் ஊக்கமான வழிவகைகளையும் உணர வேண்டும். தமது குறைகளுக்குப் பரிகாரம் காண்பதற்கு வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவதற்குப் பதில் பணியாளர்கள் மேலும் கொஞ்சம் வேலைகளை நேர்மையாக, திருத்தமாக, திறமையாக செய்வார்களேயானால், அம்மாதிரியான நடத்தையை அதிகாரத்தில் இருப்பவர் மட்டுமல்ல; பொதுமக்களும் அங்கீகரித்து வரவேற்பார்கள்.''

இப்படி நீதிபோதனை செய்பவர்கள் முதலில் தமது ஆளுகையில் உள்ள நீதிமன்றங்கள் எப்படி நடந்து கொள்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். அரசுச்

சொத்தான ''டான்சி'' நிறுவன நிலத்தை அதிகாரமுறைகேடுகள் செய்து ஜெயா - சசி கும்பல் வாங்கிக் கொண்ட வழக்கில் உச்ச நீதிமன்ற விசாரணை முடிந்து ஏறக்குறைய ஓராண்டாகிறது. இருந்தாலும் தீர்ப்பு வழங்காமல் சம்பந்தப்பட்ட ''நீதிபதிகள்'' வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணங்கள் போய் வந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாகவே குற்றஞ் சாட்டப்பட்ட ஜெயா - சசி கும்பல் தனது வெறித்தனமான - பகற் கொள்ளை ஆட்சியைத் தொடர முடிகிறது. பாசிச போலீசை ஏவி மக்களை ஒடுக்குகிறது. இதற்கு ''உச்ச நீதி'' மன்றமே துணைபோகிறது. ''தாமதிக்கப்படும் நீதி என்பது உண்மையில் அநீதியாகிறது'' என்பதை அறிந்துள்ள ''உச்ச நீதிமன்றம்'', ''டான்சி'' வழக்கில் தீர்ப்புக் கூறாமல் வேண்டுமென்றே தாமதிக்கிறது. குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்து கொள்கிறது.

மேலும் அரசு பிறப்பித்துள்ள ''ஊழியர் நடத்தை விதிகள்'' என்ற ஆணையை ஊழியர்கள் மீறக்கூடாது; அப்படி மீறி வேலைநிறுத்தம் செய்வது சட்ட விரோதமானது என்றும் கூறியுள்ளது ''உச்ச நீதி'' மன்றம். அரசுச் சொத்துக்களை அரசு ஊழியர்கள், அவர்களின் உறவினர்கள் பினாமிகள் வாங்கக் கூடாது என்பதும் கூட அரசு ஊழியர்களுக்குள்ள நடத்தை விதிதான். இந்த நடத்தை விதியை மீறித்தான் டான்சி நிலத்தை ஊதியம் பெறும் அரசு ஊழியரான ஜெயலலிதா வாங்கியுள்ளார். ஆனால், ''அரசு நடத்தை விதி'' என்பது சட்டமல்ல, அதை அரசு ஊழியர் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமில்லை என்று கூறி உயர் நீதிமன்றம் ஜெயலலிதாவை விடுதலை செய்தும் உள்ளது.

இப்படி ஆளுக்கேற்றார்போல வியாக்கியானமும் தீர்ப்பும் கூறும் நீதிமன்றம்தான் ''சமத்துவ அடிப்படையிலான நீதி'' பற்றி வாய்கிழியப் பேசுகிறது. ஜெயலலிதா இரண்டாவது முறை ஆட்சிக்கு வருவதற்கு முன்பு போடப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரிப்பதில் முனைப்புக் காட்டிய நீதிமன்றங்கள் இப்போது எல்லாவற்றையும் முடக்கிக் கிடப்பில் போட்டுவிட்டன. அரசு சாட்சியங்கள் எதிரி சாட்சியங்களாகக் கட்சிமாறி சோரம் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எதிரான நூற்றுக்கணக்கான வழக்குகளின் ஆவணங்கள் நீதிமன்ற ஆவணக் கிடங்குகளில் செல்லரித்துப் போய்விட்டன. ஜெயலலிதாவுக்கு ''சிறப்பு நீதி'' மன்றம் சிறைத்தண்டனை வழங்கியதும், அ.தி.மு.க. கிரிமினல் ரௌடிகள் விவசாயப் பல்கலைக் கழக மாணவிகள் மூவரை உயிரோடு கொளுத்தினர். இன்னும் ''போலீசுடன் மோதல்'' என்கிற பெயரில் தேவாரம் புரிந்த படுகொலை வழக்கு, வீரப்பனைத் தேடுதல் என்ற பெயரில் புரிந்த கற்பழிப்பு வழக்கு, வாச்சாத்தியில் நடந்த பெருந்திரள் கற்பழிப்பு வழக்கு, இவை போன்றவையும், பாபரி மசூதி இடிப்பு உட்பட இந்து பாசிஸ்டுகள் நடத்திய மத வெறிப் படுகொலைகள் எல்லாம் பல




ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ளன. 15 ஆண்டுகளுக்கு மேலாகியும் ''போஃபார்ஸ்'' பீரங்கி பேர வழக்கு முடியவே இல்லை. 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் பாபரி மசூதி இடிப்பு வழக்கு முடியவில்லை. ஆனால், இந்த வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் முழு அதிகாரத்துடன் இன்னமும் கொட்டமடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வேலைநிறுத்தம் செய்பவர்களின் கடமைகள், பொறுப்புகள் பற்றி சண்டப்பிரசண்டம் செய்யும் நீதிமன்றம், நேர்மையாகவும், திருத்தமாகவும், திறமையாகவும் மேலும் கூடுதலாக உழைக்கும்படி ஊழியர்களுக்கு உபதேசம் செய்யும் நீதிமன்றம் இதற்கு நேர்மாறாகத்தான் செயல்பட்டு வருகின்றன என்பதற்கு மேற்கண்டவாறு ஏராளமான சான்றுகள் உள்ளன.

கிரிமினல் குற்றங்கள் புரிந்ததாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கும் அரசு ஊழியர்கள், வேலை நீக்கம் அல்லது இடைநீக்கம் செய்யப்பட வேண்டியவர்கள்தாம் என்று கடுமையான நிலை எடுத்துத் தீர்ப்புக் கூறியிருக்கிறது ''உச்ச நீதி'' மன்றம். மத்திய, மாநில அமைச்சர்களாகவும் எம்.எல்.ஏ.க்கள் எம்.பி.க்களாகவும் போலீசு அதிகாரிகளாகவும் உள்ள ஜெயலலிதா, அத்வானி உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் மீது கிரிமினல் குற்றங்கள் புரிந்ததாக முதல் தகவல் அறிக்கைகள் பதிவாகி இருக்கின்றன. நீதிமன்றங்களில் குற்றங்கள் பதிவாகி, குற்ற அறிக்கைகள் வழங்கப்பட்டு, விசாரணை நடந்து தண்டனையும் வழங்கப்பட்டுள்ளனர். ஆனால், இவர்கள் சுதந்திரமாகத் திரிந்து அதிகாரமும் செலுத்துகிறார்கள். இதையெல்லாம் நீதிமன்றங்கள் கண்டு கொள்வதும் இல்லை.

இவ்வாறு ஆட்சியாளர்களுக்கு ஒன்றும், ஊழியர்களுக்கு வேறொன்றுமாக, பாராபட்சமாக நடந்து கொள்வதுதான் நீதிமன்றங்களின் இயல்பாக உள்ளது. அவ்வளவு ஏன், நீதிபதிகளே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், கற்பழிப்புகள், காமக்களிவெறியாட்டங்களில் ஈடுபடுபவராகவும் உள்ளனர். அவர்கள் மீதான புகார்களைப் போலீசார் பதிவு செய்ய மறுப்பதும், நீதிமன்றங்கள் விசாரிக்க மறுப்பதும், விசாரித்தாலும் இரகசியமாகச் செய்வதும் கூட நடக்கின்றது. ஆனால், வழக்கு விசாரணையின் போதும், தீர்ப்பிலும் பொது மேடையிலும் யோக்கியவான்களைப் போல பிரசங்கம் செய்கிறார்கள்.

நீதிமன்றங்கள் எல்லாம் சுத்தப் பிரகாசமான - தூய்மையான நபர்களைக் கொண்டிருப்பதாகக் கூறவே முடியாது. இதை நாட்டின் பெரிய பத்திரிக்கைகளே எழுதுகின்றன. நீதிபதிகளிடையே கிரிமினல் குற்றவாளிகள் பெருகி வருவதால் அவை குறித்து விசாரிக்கவும், நியமனங்கள் செய்யவும் ''நீதிக் கமிசன்'' ஒன்றை நிறுவ வேண்டும் என்று போலி கம்யூனிஸ்டுக் கட்சிகள் முதல் பா.ஜ.க. வரை அனைத்துக் கட்சிகளும் கோருகின்றன.

புதுடில்லியில் ஆகஸ்டு 2-ந் தேதி ''நீதித்துறை இலஞ்ச - ஊழல் மற்றும் நீதித்துறை மீதான கண்காணிப்பு'' என்ற தலைப்பில் தனியொரு மாநாடே நடந்துள்ளது. அதில், ''கடந்த ஆண்டுகளில் மேல்நிலை நீதித்துறையில் அதிர்ச்சியூட்டும் அளவுக்கு இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் வளர்ந்திருக்கின்றன. இதற்கான ஒரு காரணமாக அமைவது நீதிபதிகளை நியமிப்

www.padippakam.com


பதில் உள்ள குறைபாடுகளும் இரகசியமும் நிறைந்த முறைதான்'' என்று பேசியுள்ளனர்.

''உயர் நீதிமன்றங்களில் அப்பட்டமாகவே தெரிந்த நேர்மையற்ற நபர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இதில் சாதி, மதம் மற்றும் அரசியல் காரணங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. புல்லுக்கட்டைக் காட்டி குதிரையிடம் வேலை வாங்குவதுபோல, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகள் முன்பு உச்ச நீதிமன்றப் பதவியைக் காட்டுவதற்காகவே அங்கே ஒரு பதவிஇடம் வேண்டுமென்றே காலியாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆசையைக் காட்டி தனக்கு வேண்டியவர்களையே உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் பெறச் செய்கின்றனர். நீதிபதிகள் நியமனத்தில் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் 1993 தீர்ப்பின்படி உறுதிப்படுத்தப்பட்டது. அதன்பிறகு இதைப் பயன்படுத்தி உனக்கு இது, எனக்கு அது என்கிற அடிப்படையில் நீதித்துறை சகபாடிகளின் கும்பல் செயல்படுகிறது'' என்று உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சாவந்த் அம்மாநாட்டைத் திறந்து வைத்தபோது போட்டு உடைத்திருக்கிறார்.

வெளிநாட்டுச் சுற்றுப்பயண வசதி (டான்சி வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுக்கு இது வாடிக்கையாக உள்ளது) விசாரணைக் கமிசன் தலைவர் பதவி (கருணாநிதிக்கு ஒரு நீதிபதி மோகன், ஜெயலலிதாவுக்கு ஒரு பக்தவத்சலம் என்பதுபோல) முதல் மாநிலக் கவர்னர் வரை பல்வேறு பதவிகள் ஓய்வு பெற்ற பின்னும் வாரி வழங்கப்படுகின்றன.

இந்த இலட்சணத்தில் சட்டப்படியோ, நீதிப்படியோ தீர்ப்புகள் எதுவும் எந்த ''நீதி'' மன்றத்திலும் வழங்கப்படுவதில்லை. முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே தீர்ப்புகள் வருகின்றன. சிக்கலான, தவிர்க்க முடியாத விவகாரங்களில் கட்டை பஞ்சாயத்துகள்தாம் நடக்கின்றன.

அரசு ஊழியர்-ஆசிரியர் போராட்ட வழக்கில் கூட ஒருவகையில் கட்டை பஞ்சாயத்துதான் செய்துள்ளது உச்ச நீதிமன்றம். பணியாளர்களின் போராட்டங்கள் சட்டவிரோதமானவை என்றும் அதற்கு எதிரான



வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும் உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்து, மே.வங்க அரசு ஊழியர்கள் கொல்கத்தாவில் தலைமைச் செயலகம் அருகே நடத்திய ஆர்ப்பாட்டம்.

ஜெயலலிதா அரசின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர். அப்படி என்றால், ஒரு பிரிவினர் தவிர பணியாளர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளும்படி ஏன் கூறவேண்டும்? ''எஸ்மா - டெஸ்மா'' செல்லுமா, செல்லாதா என்று கேட்டுப் போடப்பட்ட வழக்கில் தீர்ப்புக் கூறாமல் நீதிமன்றம் தனது தீர்ப்பைக் கூறுவதற்குப் பதில், ஜெயலலிதாவின் ''கருணை''க்கு விட்டுவிட்டது. பக்கவாட்டில் கால் வைத்துத் தப்பி ஓடிவிட்டது உச்ச நீதிமன்றம்.

அதேசமயம், சூழ்நிலைமைக்கேற்றவாறு வழக்கை எடுத்துக் கொண்டு விசாரணை நடத்தித் தீர்ப்புக் கூறாமல் முறையீட்டு மனுக்களைத் தள்ளுபடி செய்ததன் மூலம் சென்னை உயர் நீதிமன்றம் தவறு செய்துவிட்டதாகக் கூறியுள்ளது. இதன்படி நீதிபதிகள் சுபாஷண் ரெட்டியும் கோவிந்தராஜனும் தமது கடமையை, பொறுப்பைத் திறமையாக செய்யத் தவறி வழக்கைத் தட்டி கழித்துவிட்டார்களே, அதற்கு என்ன தண்டனை? ஏதும் இல்லை; ''பரிசுகள்'' தாம் தரப்பட்டுள்ளன!

இதுதான் நீதிமன்றங்களின் நிலைமை. இதை அறிந்தும், வேலை நிறுத்தம் பற்றிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டதும் போலி கம்யூனிஸ்டுகளும், அவர்களின் தலைமையிலான தொழிற்சங்கங்களும் ''அதிர்ச்சி, வருத்தம், வேதனை'' தெரிவித்திருக்கின்றன. இத்தீர்ப்பு ''துரதிருஷ்டவசமானது'' என்றும் கூறியுள்ளன.

நீதிமன்றங்கள் பற்றிய மதிப்பீடும் எதிர்பார்ப்பும் வேறுமாதிரி கொண்டிருப்பவர்கள் - அவற்றின் மீது மாயையும், பிரமையும் நிரம்பி வழியச் சிந்திப்பவர்கள்தாம் இப்படிக் கூற முடியும். தொழிலாளர் வர்க்கத்தின் துரோகிகள்தாம் இப்படிச் சிந்திக்க முடியும். தொழிலாளர் வர்க்கத்தை அரசியலற்ற, சுயநலப் பொருளாதாரவாதத்துக்குள் தள்ளுவதற்கு நாட்டின் சட்டபூர்வ ஜனநாயகத்தின் மீதும் நீதித் துறையின் மீதும் நம்பிக்கை வைக்கும் சட்டவாதக் கண்கட்டு வேலையை இந்தத் துரோகிகள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

ஆசிரியர் - அரசு ஊழியர் போராட்டங்கள், தொழிற்சங்கத் துரோகிகளின் கையாலாகாத்தனத்தால் பிசுபிசுத்துப் போய், பாசிச ஆட்சியாளர்களால் கடுமையாக ஒடுக்கப்பட்ட நிலையிலும், ''உயர் நீதி'' மன்றத்திலும் ''உச்ச நீதி'' மன்றத்திலும் பரபரப்பான விசாரணைகள் நடந்து கொண்டிருந்த போதும் போலி கம்யூனிஸ்டுகள் சட்டவாதத்துக்குள் ஒளிந்து கொண்டார்கள். ஜெயலலிதாவின் பாதாரவிந்தங்களில் விழுவதைத் தாமதிக்கும் படியும், நீதிதேவன்களிடம் பிரார்த்திக்கும்படியும் ஊழியர்களை வேண்டிக் கொண்டார்கள். தமது தரப்பு வழக்கறிஞர்கள் திறமையான வாதங்களாலும், நீதிபதிகள் எழுப்பிய கேள்விகளாலும் எதிர்த்தரப்பு வழக்கறிஞர்கள் திணறிப் போன காட்சிகளை ஊழியர் கூட்டங்களில் ஆவேசமாக விளக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஜெயலலிதாவும், நீதிமன்றங்களும் சட்டவாத மாயைகள், பிரமைகளை அடுத்தடுத்து தகர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், துரோகிகள் மீண்டும் மீண்டும் சட்டவாதச் சகதிக்குள் மக்களைத் தள்ளவே முயற்சிக்கிறார்கள். எதிரிகளை விடவும் உடனடி, நேரடி ஆபத்தானவர்கள் இந்தத் துரோகிகள்தாம் என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்? ●


படிப்பகம்

www.padippakam.com

## கோக் - பெப்சி

# போதையில் ஆட்சியாளர்கள்

தில்லியில் இயங்கி வரும் ''அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கான மையம்'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம், கோகோ-கோலாவின் ஐந்து வகையான குளிர்பானங்களையும்; பெப்சியின் ஏழு வகையான குளிர்பானங்களையும் சோதனை செய்து, அப்பன்னிரெண்டு வகையான குளிர்பானங்களிலும் அளவுக்கு அதிகமாக பூச்சிக்கொல்லி மருந்துகள் கலந்திருப்பதாக, கடந்த ஆகஸ்டு முதல் வாரம் அறிக்கையொன்றை வெளியிட்டது.

ஐரோப்பிய நாடுகள் குளிர்பானங்களுக்கு நிர்ணயித்துள்ள தரக் கட்டுப்பாட்டை அளவுகோலாக எடுத்துக் கொண்டால், பெப்சி - கோக் குளிர்பானங்களில் கரைந்துள்ள பூச்சிக் கொல்லி மருந்துகளின் அளவு 15 முதல் 87 மடங்கு அதிகம் இருப்பதாக அத்தொண்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதனால் இக்குளிர்பானங்களைத் தொடர்ந்து குடிப்பவர்களுக்குப் புற்று நோய் உண்டாகக் கூடும்; நரம்பு மண்டலமும், இரைப்பையும் பாதிக்கப்படலாம்; குறைப் பிரசவம் ஏற்படலாம்; கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றில் வளரும் குழந்தையின் தன்மையே மாறிவிடலாம் என்றும் எச்சரித்துள்ளது. மேலும், இக்குளிர்பானங்களில் உடல் நலத்திற்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய கன உலோகங்கள் (Heavy Metals) கலந்துள்ளதா என்பதையும் தனியாகப் பரிசோதனை செய்து கண்டு பிடிக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

''தரமே தாரக மந்திரம்'' என விளம்பரம் செய்து கொண்டு திரியும் பெப்சி - கோக் நிறுவனங்கள், அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கான மையத்தின் குற்றச் சாட்டுகளுக்கு நாணயமாகப் பதில் அளிக்கவில்லை. மாறாக, ''எங்களின் குளிர்பானத் தயாரிப்புகளைப் பரிசோதனை செய்ய உனக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என பாசிஸ்டுகளுக்கே உரிய ஆணவத்தோடு, அம்மையத்தின் மீது எரிந்து விழுந்தன.

''அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கான மையம், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனைக் கூடமல்ல, அதேசமயம், எங்கள் நிறுவனத் தயாரிப்புகளை நெதர்லாந்திலும், ஹைதராபாத்திலும் உள்ள உலகத் தரம் வாய்ந்த ஆய்வுக் கூடங்களில் மிக நவீனமான முறையில் பரிசோதித்ததில், எங்கள் குளிர்பானங்கள் சுகாதாரமானவை; பாதுகாப்பானவை என அந்த ஆய்வுக் கூடங்கள் சான்றிதழ் வழங்கியுள்ளன'' என்று கோக்கும் பெப்சியும் விளம்பரம் செய்தன. ஆனால், ''நெதர்லாந்திலும், ஹைதராபாத்திலும் கோக் - பெப்சியின் குளிர்பானங்கள் பரிசோதிக்கப்படவில்லை; அந்நிறுவனங்கள் தயாரிக்கும் தாதுநீர்தான் பரிசோதனை செய்யப்பட்டது'' என்ற உண்மையை முதலாளித்துவ பத்திரிகைகளே போட்டு உடைத்து, பெப்சி - கோக்கின் மோசடியை அம்பலப்படுத்தின.

''நாங்கள் தினந்தோறும் இலட்சக்கணக்கான பாட்டில் குளிர்பானங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறோம்; ஆனால், அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கான மையமோ, எங்கள் தயாரிப்புகள் ஒவ்வொன்றிலும் மூன்று பாட்டில் குளிர்பானங்களை மட்டுமே பரிசோதனை செய்ததை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?'' என பெப்சியும், கோக்கும் கேள்வி எழுப்பின. சோறு வெந்துவிட்டதா எனப் பார்க்க, சோற்றுப் பானையில் இருந்து ஒன்றிரண்டு பருக்கைகளைத்தான் வெளியே எடுத்துப் பதம் பார்க்க முடியுமே தவிர, பானை சோற்றையும் கொட்டி கவிழ்த்துப் பதம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, பெப்சி - கோக்கின் இந்தக் கேள்வியில் தர்க்க நியாயத்தைவிட, அடிமுட்டாள் தனம்தான் நிரம்பி வழிந்தது.

''அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் மையம் பரிசோதனை செய்த குளிர்பானங்கள் எங்கள் நிறுவனத் தயாரிப்புகளே அல்ல; அவை போலி தயாரிப்புகள்'' என்ற ''கண்டு பிடிப்பை'' வெளியிட்ட கோக்கும், பெப்சியும், நீதிமன்றத்தின் உதவியோடு, சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு இந்தப் பிரச்சினையை அமுக்கிவிடவும் முயன்றன.

உப்புப் பெறாத விசயங்களுக்கெல்லாம் இடைக்கால தடை விதிக்கும் இந்திய நீதிமன்றங்கள், பெப்சி - கோக் உற்பத்திக்கும், விற்பனைக்கும் தடை விதிக்க மறுத்து விட்டன. அதேசமயம், மைய அரசின் உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் பெப்சி கோக்கின் குளிர்பானங்களைப் பரிசோதனை செய்து, அறிக்கை கொடுக்க வேண்டும் என உத்தரவிட்டு, பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழனாக நடந்து கொண்டன.

கோக் - பெப்சிக்கு எதிராக இந்தியா வெங்கும் பரவலாக கண்டனங்களும், போராட்டங்களும் வெடித்த பின்னும் கூட, உச்ச நீதிமன்றம் இப்பிரச்சினையை ஒரு பொதுநல வழக்காக எடுத்துக்

**பெப்சி - கோக் குளிர்பானங்களைத் தடை செய்யக் கோரி, சென்னை பல்கலைக்கழக மாணவர்கள் தன்னெழுச்சியாக நடத்திய ஆர்ப்பாட்டம்.**



www.padippakam.com

கொள்ள மறுத்துவிட்டது. ''கோக் - பெப்சி விவகாரம் எங்கெல்லாம் பிரச்சினையாக வெடிக்கிறதோ, அந்தப் பகுதியில் உள்ள நீதிமன்றத்தை அணுகி முறையிடுங்கள்'' எனக் கூறி கைகழுவி விட்டது; இதன் மூலம், மையமாக ஒரு சேர பார்க்க வேண்டிய பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்தது.

பெப்சி நிறுவனம், அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலின் கண்டுபிடிப்புகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் கூறப்பட்ட இத்தீர்ப்பு, பெப்சி - கோக் நிறுவனங்களுக்கு மிகவும் சாதகமாக அமைந்தது. பெப்சி - கோக் நிறுவனங்கள், தங்களின் குளிர்பானங்களுக்கு எதிர்ப்புக் கிளம்பிய அல்லது தங்களின் பானங்கள் தடை செய்யப்பட்ட நகரங்களில் எல்லாம் சில தனியார் நிறுவனங்களைப் பிடித்து, அவற்றின் மூலம் தங்களின் பானங்கள் பாதுகாப்பானவை என அறிவிக்கச் செய்தன. குறிப்பாக, அகமதாபாத்தைச் சேர்ந்த நுகர்வோர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் என்ற தன்னார்வ அமைப்பு, அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் மையத்தின் பரிசோதனை முடிவுகள் தவறானவை எனத் தன்னிச்சையாக அறிவித்தது.

கோக் - பெப்சியின் ''தரம்'' பற்றி குற்றச்சாட்டுகளைக் கூறிய அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் மையத்தின் ''தகுதி'', ''திறமை'', ''ஆராய்ச்சி நடந்த முறை'' பற்றியெல்லாம் கேள்வி கேட்ட துக்ளக் சோ போன்ற நடுநிலை வாதிகள், கோக் - பெப்சிக்கு நற்சான்றிதழ் வழங்கிய நிறுவனங்களின் ''தகுதி'', ''திறமை'' பற்றியெல்லாம் கேள்வியே கேட்கவில்லை.

மைய அரசின் உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவன மையம்கூட, கோக் - பெப்சி குளிர்பானங்களைத் திடீரெனக் கைப்பற்றி, பரிசோதனை நடத்தவில்லை. தில்லி உயர் நீதிமன்றம் உத்தரவு இட்ட பிறகுதான் பரிசோதனை நடத்தி, கோக் - பெப்சி குளிர்பானங்கள் பாதுகாப்பானவை எனச் சான்றிதழ் அளித்திருக்கிறது. இதனால் கோக் - பெப்சி நிறுவனங்களுக்குத் தங்களின் குளிர்பானங்களின் தரத்தை நிரூபித்துக் காட்ட, போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டது என்றுதான் கூற முடியும்.

சுகாதாரத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ''கோக் - பெப்சி குளிர்பானங்களில் அவ்வளவாக நஞ்சில்லை'' என நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார். இப்படி கேடு கெட்ட ஒரு நற்சான்றிதழை கோக் - பெப்சி நிறுவனத்திற்குக் கொடுப்பதற்கு, அமைச்சர் பயன்படுத்திய அளவுகோல் என்ன என்பதுதான் தெரியவில்லை. இது பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, மைய அரசு நிறுவனத்தின் தகுதி பற்றி யாரும் கேள்வி கேட்கக் கூடாது எனக் கூறினார். விஞ்ஞான அளவுகோல் பற்றி பதில் அளிக்க வேண்டிய அமைச்சர், நம்பிக்கையை முன்னிறுத்தித் தப்பித்துக் கொண்டார்.

இந்தியாவில் விற்கப்படும் குளிர்பானங்களில் எந்த அளவிற்கு பூச்சிக் கொல்லி மருந்துகள் - கன உலோகங்கள் கலந்திருக்கலாம் என்பதை நிர்ணயிப்பதற்கு எந்த அளவுகோலும் கிடையாது. அதை மீறும் நிறுவனங்களைத் தண்டிக்கச் சட்டமும் கிடையாது.

இதனால்தான் இப்பிரச்சினை வெடித்தவுடனேயே, கோக் - பெப்சி நிறுவனங்கள் இந்தியாவின் எந்தச் சட்டத்தையும் மீறி குளிர்பானங்களைத் தயாரிக்கவில்லை என அமெரிக்கத் தூதரகமே வக்காலத்து வாங்கியது. கோக் - பெப்சி பெயரில் சாக்கடை நீரை பாட்டிலில் அடைத்து விற்றால் கூட, நம்மை யாரும் தண்டித்துவிட முடி

## ஐரோப்பியத் தரத்தில் கிடைத்தாலும்
# மூத்திரம் மூத்திரம்தான்

''ஏப்ரல் 2004 முதல் கோக்கும் - பெப்சியும் ஐரோப்பிய தரத்தின்படி தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படவேண்டும் என உத்தரவிடப் போவதாக'' சுகாதாரத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நாடாளுமன்றத்தில் நீட்டி முழக்கி இருக்கிறார். ஐரோப்பிய தரத்தில் கிடைத்தாலும், கோக் - பெப்சியின் அடிமைகள் எச்சரிக்கை யாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால், கோக்கும் பெப்சியும் மெல்லக் கொல்லும் நச்சுப் பானங்கள் என்பதற்கு அமெரிக்காவில் இருந்தே அநேக ஆதாரங்களைத் தரமுடியும்

''அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் போக்குவரத்து போலீசார், சாலை விபத்து காரணமாக, சாலைகளில் படிந்து, காய்ந்து போன இரத்தக் கறைகளைக் கழுவிச் சுத்தம் செய்வதற்கு கோலா குளிர்பானங்களைப் பயன்படுத்துவார்கள்'' என டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழுக்கு ஒரு வாசகர் கடிதம் எழுதியிருக்கிறார்.

அமெரிக்காவில் செயல்பட்டு வரும் பெப்சி - கோக் எதிர்ப்பு இயக்கத்தினர், ''பெப்சி - கோக் ஏஜெண்டுகள், தங்கள் சரக்கு லாரிகளின் என்ஜினைச் சுத்தப்படுத்துவதற்கு, கோக் கூழைப் பயன்படுத்தி வருவதை''க் குறிப்பிட்டு, அப்பானங்களின் நச்சுத் தன்மையை அம்பலப்படுத்தி வருவதையும் அவ்வாசகர் குறிப்பிட்டுள்ளார்.

''அமெரிக்காவில் பெப்சி - கோக் கூழை ஏற்றிச் செல்லும் லாரிகள், அவற்றின் முகப்பிலோ, பின்புறமோ அரிமானத் தன்மை கொண்ட பொருளை ஏற்றிச் செல்வதாகக் குறிப்பிட வேண்டும். துரு ஏறியிருக்கும் கார் பம்பர்களைச் சுத்தம் செய்யவும், காரிலுள்ள மின்கலங்கள் ஒழுகி அதனால் ஏற்படும் கரைகளைத் துடைக்கவும் அமெரிக்காவில் பெப்சி - கோக் குளிர்பானங்கள் பயன்படுத்தப்படுகின்றன'' என பெப்சி - கோக்கின் மகிமையை அவ்வாசகர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்து மதவெறியர்களின் இரட்டை நாக்கு: மைய அரசு பெப்சி - கோக்கிற்கு வக்காலத்து வாங்கும் போது, பா.ஜ.க.வின் இளைஞர் அணியோ பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து போராட்டம் நடத்துகிறது.



யாது என்ற தைரியத்தில்தான், கோக் - பெப்சி நிறுவனங்கள் தரத்தில் புகுந்து விளையாடி இருக்கின்றன.

உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவன மையம் கூட, தாது நீருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தர அளவுகோலைக் கொண்டு கோக் - பெப்சி குளிர்பானங்களைப் பரிசோதித்து விட்டு, அவை பாதுகாப்பானவை எனச் சான்றிதழ் கொடுத்திருப்பது, ஒரு வகையில் மோசடித்தனமானதுதான். கோக் - பெப்சியின் முறைகேடுகளையும், மைய அரசின் கூட்டுக் களவாணிதனத்தையும் ஒரேயடியாக ஊத்தி மூடுவதற்காகவே, இப்பொழுது நாடாளுமன்ற விசாரணை கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

●●●

தாராளமயம் என்றால் தரம் என்பது எப்படி மிகப் பெரிய மோசடியோ, அது போலவே தாராளமயம் என்றால் சுதந்திரமான போட்டி என்பதும் மிகப் பெரிய மோசடி. இதையும் பச்சையாக வெளிச்சம் போட்டுக் காட்டியவர்கள் பெப்சி - கோக் நிறுவனங்கள்தான்.

காளிமார்க், வின்சென்ட், மாப்பிள்ளை விநாயகர் போன்ற உள்ளூர் குளிர்பானங்களையும், கோலி சோடாக்களையும் சந்தையில் இருந்து விரட்டியடிக்க கோலாக்களின் ''தரம்'' பயன்படவில்லை. மாறாக, பெப்சியும், கோக்கும் நரித்தனமான கழுத்தறுப்புப் போட்டியில் குதித்தன.

பெட்டிக் கடைகள் தொடங்கி ''டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள்'' வரையிலும்; உணவு விடுதிகள், திரையரங்குகள், கேளிக்கை விடுதிகளிலும் பெப்சி, கோக் தவிர உள்ளூர் குளிர்பானங்கள் கிடைக்கக் கூடாது என்பதற்காகவே, குளிர்பதனப் பெட்டி, பெயர்ப் பலகைகள், கொள்முதலில் சலுகைகள் எனப் பலவாறான 'அன்பளிப்புகளை' விட்டெறிந்து பெப்சியும், கோக்கும் உள்ளூர்க் கடைக்காரர்களை வளைத்துக் கொண்டன; இதன் மூலம் நுகர்வோர், பெப்சி அல்லது கோக் - இந்த இரண்டில் ஒன்றைத்தான் குடிக்க வேண்டும் என்ற பொறிக்குள் சிக்க வைக்கப்பட்டனர்.

இதைவிட முக்கியமாக, உள்ளூர் குளிர்பான / சோடா நிறுவனங்களின் காலி பாட்டில்களைப் பணம் கொடுத்து வாங்கி உடைத்து விடுவது; உள்ளூர் குளிர்பான / சோடா நிறுவனங்களுக்கு பாட்டில்கள் செய்து தரும் நிறுவனங்களிடம், அவர்களுக்கு பாட்டில்கள் செய்து கொடுத்தால், பெப்சி - கோக் பாட்டில் ஆர்டர் உங்களுக்குக் கிடைக்காது என நெருக்கடி கொடுப்பது - இவற்றின் மூலம் உள்ளூர் குளிர்பான / சோடா நிறுவனங்களுக்குத் தேவையான பாட்டில்களைக் கிடைக்காமல்

## பாலக்காடு நச்சுக்காடானது

கேரள மாநிலத்தின் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள பிளாச்சிமடா பஞ்சாயத்தில் அமைந்துள்ள கோகா-கோலாவின் குளிர்பான ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவை, பிரிட்டிஷ் வானொலி நிலையத்தைச் சேர்ந்த ஜான் வெயிட் எடுத்துப் போய் பரிசோதனை செய்தார். இங்கிலாந்தின் எக்ஸெடெர் பல்கலைக்கழகத்தின் பரிசோதனைக் கூடத்தில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், சுற்றுப்புறத்திற்கும் மனிதர்களின் உடல்நலத்திற்கும் கேடு விளைவிக்கக்கூடிய ஈயம், காட்மியம் ஆகிய கன உலோகங்கள், அந்த ஆலைக் கழிவில் அளவுக்கு அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காட்மியம் புற்று நோயையும், சிறுநீரகக் கோளாறுகளையும் ஏற்படுத்தக் கூடியது; ஈயம், கர்ப்பிணிப் பெண்களையும், சிறுவர்களையும் பாதிக்கக் கூடியது. கோகோ-கோலா நிறுவனம், இந்த அபாயகரமான கன உலோகங்கள் கலந்துள்ள ஆலைக் கழிவை, உரம் என்ற பெயரில் பிளாச்சிமடா பகுதி விவசாயிகளின் தலையில் கட்டி, அவர்களின் வயல்களில் கொட்டி வருகிறது. இதனால் இப்பகுதியில் விவசாய நிலங்களும், நிலத்தடி நீரும் மாசுபட்டு போய்விட்டது.

இப்பகுதியில் கிடைக்கும் நிலத்தடி நீரில் கலந்துள்ள காட்மியம், ஈயத்தின் அளவு, உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்துள்ள அளவையும் தாண்டிப் போய்விட்டதால், இந்த நீர் கால்நடைகள் குடிப்பதற்குக் கூட இலாயக்கில்லாமல் போய்விட்டது. கோகோ கோலா நிறுவனம் ஆலைக் கழிவுகளை வயல்வெளிகளில் கொட்டி வருவதாலும், நிலத்தடி நீரை வரைமுறையில்லாமல் உறிஞ்சுவதாலும்தான் நிலத்தடி நீர் மாசுபட்டுப் போனதாகக் கூறுகிறார், ஜான் வெயிட். பிரிட்டிஷ் வானொலி நிலையம் ஒளிபரப்பிவரும், ''உண்மைகளுக்கு முகம் கொடுப்போம்'' என்ற நிகழ்ச்சியின் மூலம், இந்த உண்மைகளை உலகெங்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியும் விட்டார், ஜான் வெயிட்.

இந்த கன உலோகங்கள், வேறு எங்கிருந்தோ கால் முளைத்து வந்து ஆலைக் கழிவில் கலந்திருக்க முடியாது. கோகோ - கோலா நிறுவனம் தயாரிக்கும் குளிர்பானங்களின் கசடுதான் இந்த ஆலைக் கழிவு. அதனால், கோலா குளிர்பானங்களில் இந்த கன உலோகங்கள் கலந்துள்ளதா எனப் பரிசோதனை செய்ய வேண்டும் என ஜான் வெயிட் கோரியிருக்கிறார்; அறிவியல் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கான மையமும் இதே போன்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறது. ஆனால், மைய அரசோ இச்சோதனைகளை முழுமையாக நடத்தாமல், கோக் குளிர்பானங்கள் சுகாதாரமானவை என அறிவித்துவிட்டது. கோக் குடிக்கும் இந்தியர்களின் உடல்நலம் பற்றிதான் அரசிற்கு எத்துணை கரிசனம்! ●

கேரளாவின் பாலக்காடு மாவட்ட மக்கள் கோக் - பெப்சி ஆலையை மூடக் கோரி கேரளத் தலைமைச் செயலகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

# கோக் - பெப்சி பன்னாட்டு கம்பெனிகளை விரட்டியடிப்போம்!

கோக் - பெப்சி தயாரிக்கும் பன்னிரெண்டு வகையான குளிர்பானங்களில் பூச்சிக் கொல்லி மருந்தின் தன்மை மிகுந்திருப்பதாக அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மையம் அறிவித்ததைத் தொடர்ந்து நாடு முழுவதும் அக்குளிர்பானங்களுக்கு எதிரான போராட்டம் பல்வேறு அமைப்புகளாலும், பொதுமக்களால் தன்னெழுச்சியாகவும் நடந்தது.

தமிழகத்தில் ம.க.இ.க, பு.ஜ.தொ.மு, பு.மா.இ.மு, வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக கோக் - பெப்சி குளிர்பானங்களைப் புறக்கணிக்குமாறு பிரச்சாரமும் போராட்டங்களும் நடத்தி வருகின்றன. வெறும் நச்சு பானம் என்ற வகையில் மட்டுமல்லாது, இக்குளிர்பானங்கள் அமெரிக்க ஆதிக்கத்தின் குறியீடு என்ற வகையில் விரட்டியடிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மையப்படுத்தி மேற்கண்ட அமைப்புகள் பிரச்சாரம் - போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, சென்னையில் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. அமைப்புகள் கடந்த ஒன்பதாம் தேதியிலிருந்து தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை, 'கோக் - பெப்சியைக் குடிக்காதீர்! அமெரிக்க மூத்திரம் பருகாதீர்!' என்றும் 'வணிகர்களே! கோக் - பெப்சியைக் கடைகளில் விற்பனை செய்யாதீர்!' என்றும் எழுதப்பட்ட முழக்க அட்டைகளுடன் தொடர் பிரச்சாரத்தை மேற்கொண்டன. சென்னையில் மையமான எல்லா பகுதிகளிலும் நடைபெற்ற இப்பிரச்சார இயக்கம் மக்களிடையேயும், வணிகர்களிடையேயும் வரவேற்பைப் பெற்றது.

ஆகஸ்டு 14-ஆம் தேதி பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக சைதை கடை வீதியில் கோக்-பெப்சி விளம்பரப் பலகைகளைத் தார் பூசி அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மறுநாள், ஆகஸ்டு 15 - 'சுதந்திர தின'த்தன்று தோழர்கள் சிவப்பு சட்டைகளுடன் முழக்க அட்டைகள், கொடிகள் ஏந்திக் கொண்டு புரசை, ஓட்டேரி, அயனாவரம், கொரட்டூர், பாடி, முகப்பேர் பகுதிகளில் மிதிவண்டிப் பிரச்சாரம் மேற்கொண்டனர். மக்கள் கூடும் 16 முக்கிய சந்திப்புகளில் பறையடித்துத் தெருமுனை கூட்டங்கள் நடத்தினர். கொரட்டூரில் கோக் பாட்டில்களை ஏற்றிவந்த லாரியை வழிமறித்து பெயர் பலகைகளைத் தார்பூசி அழித்தனர். பிரச்சாரம் செய்யப்பட்ட வழிகளிலிருந்த பெரிய பெரிய விளம்பர போர்டுகளும் தார்பூசி அழிக்கப்பட்டன.

இப்பிரச்சார இயக்கத்தின்போது பெரும்பான்மையான மக்களிடமிருந்து கிடைத்த ஆதரவு தோழர்களுக்கு உற்சாகத்தை அளித்ததோடு கோக் - பெப்சி பன்னாட்டு கம்பெனிகளுக்கு எதிரான போராட்டத்தை இன்னும் வீச்சாகக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்ற அவசியத்தையும் உணர்த்தியது.

தகவல்: ம.க.இ.க., சென்னை.

---

செய்து, அவற்றின் உற்பத்தியை முடக்கும் கீழ்த்தரமான சதியையும் பெப்சி - கோக் நிறுவனங்கள் நடத்தி வருகின்றன.

●●●

கோக்கும், பெப்சியும் தரமற்ற, சுகாதாரமற்ற, பாதுகாப்பற்ற பானங்கள் என்பது மட்டுமல்ல பிரச்சினை; சுற்றுப்புறச் சூழலையும், நிலத்தடி நீரையும் நஞ்சாக்குகிறது என்பது மட்டுமல்ல பிரச்சினை. ஏகாதிபத்திய பொருளாதார ஆதிக்கத்திற்கு ஏற்றபடி போட்டியை ஒழித்துக்கட்டி, இந்தியக் குளிர்பானச் சந்தையைக் கையில் வைத்திருப்பதும்; ஏகாதிபத்திய நுகர்வுக் கலாச்சார வெறியையும், அதன்மூலம் ஏகாதிபத்திய அடிமை மோகத்தைப் பரப்பும் "பிராண்டாக" இருப்பதும்தான் தலையாய பிரச்சினை. ஆனால், கோக் - பெப்சிக்கு எதிராக ஆரவாரமாகச் சத்தம் போட்ட ஆர்.எஸ்.எஸ். தொடங்கி சி.பி.எம். வரையிலான அனைத்து ஓட்டுக் கட்சிகளும் இதைத் "தர"ப் பிரச்சினையாகச் சுருக்கிவிட்டன.

அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் விற்பது போன்ற "தரமான" பெப்சி - கோக்கை, இந்தியாவிலும் விற்பது அந்த நிறுவனங்களுக்கு பெரிய காரியமல்ல. அதே சமயம், பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் அனைத்து நுகர்பொருட்களும் அமெரிக்க - ஐரோப்பிய தரத்தில், இந்தியாவிலும் விற்கப்படுமா என்றால், அது ஒருக்காலும் நடக்காது. ஏனென்றால், காலாவதியான தொழில்நுட்பம், ஓடி ஓடித் தேய்ந்து போன இயந்திரங்கள், கழித்துக் கட்டப்படும் நுகர்பொருட்கள் - இவற்றை ஏழை நாடுகளின் தலையில் கட்டுவதுதான் அவர்களின் நோக்கம். ஏழை நாடுகளைக் குப்பைத் தொட்டியாக மாற்றும் இந்த ஏகாதிபத்திய கொள்கைக்கு, அவர்கள் அழகாகச் சூட்டியிருக்கும் பெயர்தான், தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம்.

"இந்தியாவில் கிடைக்கும் நிலத்தடி நீர் தொடங்கி, காய்கறி, உணவுப் பொருட்கள் வரையிலும், அனைத்திலும் அபாயகரமான இரசாயனப் பொருட்கள் கலந்திருக்கும்பொழுது, கோக் - பெப்சியை மட்டும் குற்றம் சாட்டுவது ஒருதலைபட்சமானது" என கோக்கின் ஆதரவாளர்கள் நடுநிலை தவறாத நியாயவான்களைப் போலப் பேசுகிறார்கள். நாம் கோக்கையும், பெப்சியையும் குற்றம் சாட்டினால், அவர்களோ பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தும் விவசாயிகளைக் குற்றம் சாட்டுகிறார்கள். "ஐரோப்பிய நாடுகளின் தரக் கட்டுப்பாட்டினை இந்தியப் பொருட்களுக்குப் பிரயோகித்தால், உங்கள் நாடு ஏற்றுமதியே செய்ய முடியாது" என கோக் - பெப்சியின் அதிகாரிகள் எகத்தாளம் பேசுகிறார்கள்.

ஏகாதிபத்தியவாதிகளின் இந்த எகத்தாளத்திற்கு ஓட்டுக் கட்சிகளால் பதில் அளிக்க முடியாது. ஏனென்றால், தாராளமயத்தை ஆதரித்துக் கொண்டே பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகப் போரிட முடியாது; தரத்தைக் காட்டி அந்நிறுவனங்களின் பொருட்களைப் புறக்கணிக்கச் சொல்ல முடியாது.

"எவ்வளவுதான் தரம் குறைவாக இருந்தாலும், உள்ளூர் பொருட்களைத்தான் ஆதரிப்போம்; எவ்வளவுதான் தரத்தில் உயர்வாக இருந்தாலும் பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களைப் புறக்கணிப்போம். ஏற்றுமதி சந்தைக்காக மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுக்கு வால் பிடிப்பதைவிட, உள்நாட்டுச் சந்தையையும், தொழில்களையும் பாதுகாப்போம்" என்ற தற்சார்பு அரசியல் மூலம்தான் ஏகாதிபத்தியவாதிகளின் திமிருக்குப் பதிலடி கொடுக்க முடியும்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக எடுத்துச் செல்ல வேண்டிய பிரச்சினையை, ஓட்டுக் கட்சிகளும், நீதிமன்றமும் திட்டமிட்டே, தரம் சம்மந்தப்பட்ட பிரச்சினையாகச் சுருக்கி, சட்டவாதத்திற்குள் மூழ்கடித்தன. பெரும் பரபரப்போடும், ஆரவாரத்தோடும் எழுந்த இந்தப் பிரச்சினை, பாம்பும் சாகவில்லை, தடியும் நோகவில்லை என்ற கதையாக முடிந்து விட்டது.

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# பாபர் மசூதி இடிப்பு வழக்கு:
# அத்வானி எழுதிய தீர்ப்பு

பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக, அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி, வினய் கத்தியார், அசோக் சிங்கால், கிரிராஜ் கிஷோர், வீ.எச். டால்மியா, சந்நியாசினி ரிதம்பரா ஆகியோர் மீது போடப்பட்டிருந்த சதி குற்றச்சாட்டு வழக்கை, மையப் புலனாய்வுத் துறை தற்பொழுது சுத்தமாக கைகழுவி விட்டது.

இவர்களுள் அத்வானி மீது மட்டும், "சர்ச்சைக்குரிய கட்டிடத்தை இடித்துத் தள்ள வேண்டும் என்ற சதித் திட்டம், அத்வானி 1990-இல் நடத்திய சோமநாத் ரத யாத்திரையின் பொழுதே தொடங்கிவிட்டது; மசூதி இடிக்கப்படுவதற்கு முதல் நாள், அத்வானி, ஜோஷியையும், மற்ற பிறரையும் வினய் கத்தியார் வீட்டில் கூட்டி, இத்திட்டத்தை நடத்தி முடிப்பது தொடர்பாக ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்; கரசேவகர்கள் இடித்துக் கொண்டிருந்த பொழுது, அத்வானி அப்போதைய உ.பி. முதல்வரான கல்யாண் சிங்கைத் தொலைபேசியில் அழைத்து, மசூதியின் மூன்று மாடங்களும் இடிக்கப்படும்வரை பதவியை ராஜினாமா செய்ய வேண்டாம் என அறிவுறுத்தினார்; அத்வானி கர சேவகர்களைத் தூண்டிவிட்டு, நெடுஞ்சாலையை மறிக்கச் செய்து, அதன் மூலம் மைய அரசின் படைகள் அயோத்திக்குள் நுழைவதைத் தடுத்தார்" என்ற நான்கு ஆதாரங்களை முன் வைத்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, மசூதி இடிக்கப்பட்ட சதியில் அத்வானிக்கு நேரடித் தொடர்புண்டு என்ற விதத்தில், மைய புலனாய்வுத் துறை இச்சதி வழக்கைத் தொடுத்திருந்தது.

"எஸ்மா"வில் குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர்களின் பதவிகள் உடனடியாக பறிக்கப்படுகின்றன. ஆனால், கிரிமினல் சதிக் குற்றம் சுமத்தப்பட்ட அத்வானியும், ஜோஷியும் அதிகாரமிக்க அமைச்சர்களாக, கருப்புப் பூனை பாதுகாப்போடு வலம் வருவதோடு, அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களின் மீது சுமத்தப்பட்ட சதிக் குற்றச்சாட்டை உடைத்தும் எறிந்துவிட்டனர். தற்பொழுது இவர்கள் மீது, "மதக்கலவரத்தை / மதப் பகைமையைத் தூண்டும்படி நடந்து கொண்டார்கள்" என்ற உப்புப் பெறாத வழக்கு மட்டுமே, மையப் புலனாய்வுத் துறையால் புதிதாகப் போடப்பட்டுள்ளது.

அத்வானி, ஜோஷி, உமாபாரதி உள்ளிட்டு எட்டு பேரின் மீது போடப்பட்டிருந்த சதி வழக்கை கை கழுவிய சதிக்கு, பிரதமர் வாஜ்பாயியின் கீழுள்ள மையப் புலனாய்வுத் துறை மட்டும் உடந்தையாக இருக்கவில்லை. இந்து மதவெறிக்கு ஜால்ரா தட்டி வரும் நீதித்துறையும் இச்சதிக்கு மறைமுகமாக உதவி செய்திருக்கிறது. மேலும், இந்து மதவெறியர்களோடு கூட்டுச் சேர்ந்திருந்த மாயாவதியின் ஒத்துழைப்பு; இந்து 'மதவெறியை எதிர்ப்பதில் காங்கிரசு போடும் இரட்டை வேடம் - இவை எல்லாவற்றையும் பயன்படுத்திக் கொண்டுதான், இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சி, இச்சதிக் குற்றச்சாட்டை மிகவும் புத்திசாலித்தனமாகக் கைகழுவி விட்டது.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து, நரசிம்மராவ் தலைமையில் இருந்த மைய அரசு, உ.பி.யில் ஆளுநர் ஆட்சியைக் கொண்டு வந்தது. இந்த ஆளுநர் ஆட்சியில், பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக, ராமஜென்ம பூமி போலீசு நிலையத்தில் இரண்டு முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டன. அதிலொன்று, (முதல் தகவல் அறிக்கை எண்: 197) பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக, முகம் தெரியாத இலட்சக்கணக்கான கரசேவகர்கள் மீது சதிக் குற்றச்சாட்டை சுமத்தியிருந்தது. ஆனால், முகம் தெரிந்த அத்வானி, ஜோஷி, உமாபாரதி, ரிதம்பரா உள்ளிட்ட எட்டு பேரின் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை (எண்: 198), கலவரத்தைத் தூண்டிவிடும்படி பேசினார்கள் என்று மட்டுமே அவர்கள் மீது குற்றம் சுமத்தியது. அத்வானியும், அவர்களது சகாக்களும் சதி வழக்கில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான "பிள்ளையார் சுழி" இங்குதான் போடப்பட்டது.

பாபர் மசூதியை இடித்த சதியில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. தலைவர்களுக்கு நேரடித் தொடர்பு உண்டு என்பது ஊரறிந்த உண்மை. அத்வானியும், ஜோஷியும் மசூதிக்கு சற்றே தொலைவில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் அமர்ந்து கொண்டு, மசூதி இடிக்கப்படுவதை மேற்பார்வை பார்த்தனர்; மசூதியை இடித்துக் கொண்டிருந்த கரசேவகர்களை மேலும் வெறியூட்டுவதற்காக, உமாபாரதி ஒலிபெருக்கியில் "இன்னும் ஒரு போடு போடு" எனக் கத்திக் கொண்டிருந்தார். இச்செய்திகள் அனைத்தும் படங்களோடு, அப்பொழுது அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தன. எனினும், அத்வானி - அவரது சகாக்கள் மீது ஆரம்பத்திலேயே சதிக் குற்றச்சாட்டை சுமத்தாததற்குக் காரணம், அதற்கான ஆதாரங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை என சி.பி.ஐ. சாக்கு போக்கு சொல்லியது. புரட்சியாளர்கள் மீதும், உரிமைக்காகப் போராடும் மக்கள் மீதும், இவர்கள் அனைத்து ஆதாரங்களையும் திரட்டிவிட்டா வழக்கு போடுகிறார்கள்?

உ.பி.யில் நடந்துவந்த கவர்னர் ஆட்சி, கர சேவகர்கள் மீது போடப்பட்டிருந்த சதி வழக்கை மைய அரசின் ஒப்புதலோடு, மைய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைத்தது. அத்வானி, அவரது சகாக்கள் மீது போடப்பட்டிருந்த வழக்கு, உ.பி. புலனாய்வு போலீசிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரிக்க ரே பேரேலியில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டதோடு, பிப். 93-இல் அந்நீதிமன்றத்தில் அத்வானி மீதும், மற்ற ஏழு தலைவர்களின் மீதும் குற்றப் பத்திரிகையும் பதிவு செய்யப்பட்டது.

இதனிடையே, உ.பி. கவர்னர் ஆட்சி, அத்வானி மற்றும் ஏழு பேரின் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்கையும்; மசூதி இடிப்பு தொடர்பான பிற 47 வழக்குகளையும் மையப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைத்தது. கர சேவகர்கள் மீது போடப்பட்டிருந்த சதி வழக்கை விசாரிக்க, அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலோடு லக்னோவில், உயர் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரம் கொண்ட சி.பி.ஐ. நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

ரே பேரேலி சிறப்பு நீதிமன்றத்தில், அத்வானி மற்றும் ஏழு தலைவர்களின் மீது நடந்து வந்த விசாரணையை,


படிப்பகம்

www.padippakam.com




உ.பி. கவர்னர் ஆட்சி ஒரு நிர்வாக ஆணையின் மூலம் லக்னோ சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றியது. இதன் பிறகுதான், சி.பி.ஐ., கரசேவகர்கள் வழக்கையும், அத்வானி வழக்கையும் ஒன்றாக இணைத்து, ஒரே குற்றப் பத்திரிகையைப் பதிவு செய்தது. லக்னோ சிறப்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில்தான் அத்வானி உள்ளிட்டு எட்டு பேரின் மீதும் இந்திய தண்டனைச் சட்டம் 120-பி-யின் கீழ் சதிக் குற்றம் சுமத்தப்பட்டது.

அதே சமயம், அத்வானியும், மற்றவர்களும் தங்களின் மீது சுமத்தப்பட்ட சதிக் குற்றச்சாட்டை உடைக்க சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தத் துவங்கினர். ''ரே பேரேலி சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்த தங்கள் மீதான வழக்கை, அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல், லக்னோ சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றியது தவறு; எனவே, லக்னோ சிறப்பு நீதிமன்றத்தில் தங்கள் மீது நடந்து வரும் விசாரணையை ரத்து செய்ய வேண்டும்'' என அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

இவ்வழக்கை விசாரித்த அலகாபாத் உயர் நீதிமன்றம், ''இந்நீதிமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் வழக்கை மாற்றியது தவறு'' என்ற நிர்வாக நடைமுறையைக் காரணம் காட்டி, அத்வானி மீதான சதி வழக்கை லக்னோ சிறப்பு நீதிமன்றம் விசாரிக்க முடியாது எனத் தீர்ப்பளித்தது. அதே சமயம், ''உ.பி. அரசு, அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று, இவ்வழக்கை லக்னோ சிறப்பு நீதிமன்றத்தில் மீண்டும் நடத்தலாம்'' என ஆலோசனையும் கூறியது.

2001-இல் இத்தீர்ப்பு வெளிவந்த பொழுது, உ.பி.யில் பா.ஜ.க. - பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்தது. அப்பொழுது முதல்வராக இருந்த பா.ஜ.க.வின் ராஜ்நாத் சிங், அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலோடு ஒரு நிர்வாக ஆணையை மீண்டும் வெளியிட மறுத்துவிட்டார். இதனால் லக்னோ சிறப்பு நீதிமன்றம் அத்வானி மீதும், மற்ற ஏழு பேரின் மீதும் சி.பி.ஐ. தாக்கல் செய்திருந்த சதி குற்றச்சாட்டை ரத்து செய்தது.

பா.ஜ.க.வின் ஆதரவோடு நேற்று வரை உ.பி. முதல்வராக இருந்த மாயாவதியும், புதிய நிர்வாக ஆணையை வெளியிட மறுத்துவிட்டதோடு, ரே பேரேலி சிறப்பு நீதிமன்றத்திற்கும் அந்நீதிமன்றத்தில் ஏற்கெனவே அத்வானி மீது பதிவு செய்யப்பட்டிருந்த உப்பு சப்பில்லாத குற்றப் பத்திரிகைக்கும் மீண்டும் உயிர் கொடுத்தார். அலகாபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிலும், மாயாவதி தலைமையில் உள்ள உ.பி. அரசு ரே பேரேலி நீதிமன்றத்தை மீண்டும் அமைத்தது சரியென்றே தீர்ப்பு வந்தது.

இத்தீர்ப்புகளைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்ட இந்து மதவெறிக் கூட்டணி ஆட்சி, மையப் புலனாய்வுத் துறையின் மூலம், ரே பேரேலி சிறப்பு நீதிமன்றத்தில், அத்வானி மீதும் மற்ற ஏழு பேர் மீதும் மதப் பகைமையை / மதக் கலவரத்தைத் தூண்டும்படி நடந்து கொண்டார்கள் என்ற குற்றப் பத்திரிகையை - ஏற்கெனவே உ.பி. புலனாய்வு போலீசார் பதிவு செய்த உப்பு சப்பில்லாத குற்றத்தைப் புதிதாகப் பதிவு செய்திருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், நீதிமன்றம் போட்ட கோட்டில், இந்து மதவெறி பாசிஸ்டுகள் ரோடே போட்டுவிட்டனர்.

போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு பா.ஜ.க.வை எதிர்க்கும் அனைத்து மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சிகளும் இந்து மதவெறியர்களைத் தண்டிக்க சட்டத்தையும் நீதிமன்றத்தையும் மட்டுமே நம்பச் சொல்லுகிறார்கள். அத்வானி மீது சதிக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணையில், ஒரு சாதாரண நிர்வாக நடைமுறை மீறப்பட்டதைக் காரணமாக வைத்து நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, அவ்வழக்கின் போக்கை திசைதிருப்பி விட்டது எனில், இந்துமதவெறி கிரிமினல்களைத் தண்டிக்க சட்டத்தையும், நீதிமன்றத்தையும் இனியும் நம்பிக் கொண்டிருக்க முடியுமா?

காங்கிரசின் துணையோடு மைய ஆட்சியைப் பிடித்து விட்டால், இந்து மதவெறியர்களை அடக்கி விடலாம் என்ற மாயையையும் இவர்கள் திரும்பத் திரும்ப பரப்புகிறார்கள். ஆனால், மகாராஷ்டிராவை ஆளும் காங்கிரசு கூட்டணி ஆட்சியால், மும்பய்க் கலவரத்தை முன்னின்று நடத்திய, சிறீகிருஷ்ணா கமிசனால் குற்றவாளி என அடையாளம் காட்டப்பட்ட ஒரு இந்து மதவெறியனையாவது தண்டிக்க முடிந்ததா?

இந்து மதவெறியர்களுக்கு கருப்புப் பூனைப் படை மட்டும் பாதுகாப்பு கொடுக்கவில்லை. சட்டம், நீதிமன்றம், போலீசு ஆகிய அரசு இயந்திரத்தின் உறுப்புகள் அனைத்துமே அவர்களைப் பாதுகாக்கும் கேடயமாகத்தான் பயன்படுகின்றன. எனவே, இந்த சட்டவாத - நாடாளுமன்றவாத மாயையில் இருந்து உழைக்கும் மக்கள் விடுபடாதவரை, அவர்கள் இந்த மாயையைப் புறக்கணிக்காதவரை, இந்து மதவெறி பிடித்த கிரிமினல் குற்றவாளிகளைத் தண்டிக்கவே முடியாது!

● அழகு

www.padippakam.com

# இந்தியா திவாலாகிறது

## உலக வங்கியின் எச்சரிக்கை

அப்துல் கலாம் தொடங்கி பல்வேறு அரைவேக்காடு அறிஞர்கள் வரையிலும், இந்தியா 2020 ஆண்டுக்குள் வல்லரசாகிவிடும் என ஆருடம் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். 'தேச'பக்தி கொண்ட இந்தியர்கள் முழித்துக் கொண்டே காணும் இந்தக் கனவு நனவாவதற்கு இன்னும் பதினேழே ஆண்டுகள்தான் உள்ளன. பதினேழே ஆண்டுகளுக்குள் இந்தியா, அமெரிக்காவைப் போல வல்லரசு ஆக வேண்டும் என்றால், அதன் பொருளாதார பலம் எப்படி இருக்க வேண்டும்? கோதாவில் இறங்கத் தயாராகவுள்ள குத்துச் சண்டை வீரன் போல இல்லாவிட்டாலும், புல் தடுக்கிப் பயில்வானைப் போல இருக்கக் கூடாது. ஆனால், இந்தியப் பொருளாதாரமோ புல் தடுக்கிப் பயில்வானை விட மோசமான நோஞ்சானாக, தடுக்கிக் கீழே விழுந்தால், ''கோமா''விற்குப் போய்விடும் நோயாளியாக இருக்கிறது என உலக வங்கியே எச்சரிக்கை செய்திருக்கிறது.

**''இந்திய வளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வு''** என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள உலக வங்கி, அவ்வறிக்கையில்,

● ''1991-ஆம் ஆண்டில் தங்கத்தை அடகு வைக்கும் அளவிற்கு இருந்த நிதி நெருக்கடியைவிட, மிக மோசமான நிதி நெருக்கடியில் இந்தியா சிக்கிக் கொண்டுள்ளது.

● பொருளாதார வளர்ச்சி ஆமை வேகத்தில் நகர்கிறது. கோடிக்கணக்கான இந்தியர்கள் இன்றும் வறுமையில்தான் வாடுகிறார்கள்; பிராந்தியங்களுக்கு இடையிலும், கிராமம் நகரத்திற்கும் இடையிலுமான ஏற்றத்தாழ்வுகள் வளர்ந்து கொண்டே செல்கின்றன.

● கிராமப்புற வேலையின்மை, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் அகால மரணமடைவது; எய்ட்ஸ் நோய் ஆகியவற்றைத் தடுப்பதில் சொல்லிக் கொள்ளும்படி முன்னேற்றம் ஏற்படவில்லை.

● வளர்ச்சி என்பது கூட ஒரே சீராக இல்லை; ஏற்றத்தாழ்வாக உள்ளது. இதனால் உ.பி., ம.பி., பீகார், ஒரிசா ஆகிய பின்தங்கிய மாநிலங்களில் வறுமை தாண்டவமாடுகிறது'' என இந்தியப் பொருளாதார நிலைமையையும், மக்களின் வாழ்நிலைமையையும் சுட்டிக் காட்டியுள்ளது.

உலக வங்கி எது சொன்னாலும், அதற்கு மறுப்பேதும் சொல்லாமல் தலையாட்டி வரும் மைய அரசு, உலக வங்கியின் இந்த எதிர்மறையான அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. ''1991-ஆம் ஆண்டு இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு பூஜ்யம். இப்பொழுது இந்தியாவிடம் 7,500 கோடி அமெரிக்க டாலர் கையிருப்பில் உள்ளது. இதனால் இந்தியாவிற்குத் தேவையான எதையும் நாம் தயக்கமில்லாமல் இறக்குமதி செய்து கொள்ளலாம். கடந்த ஆண்டு மே மாதம் முடிய ஒரேயொரு அமெரிக்க டாலரை வாங்க இந்தியா ரூ. 49.11-ஐக் கொடுக்க வேண்டியிருந்தது. இன்று ரூ. 47.35 மட்டும் கொடுத்து, ஒரு அமெரிக்க டாலரை வாங்கிவிட முடியும். இது பொருளாதார வளர்ச்சி இல்லையா?

இந்தியா இனி சில நாடுகளில் இருந்து எவ்வித உதவியும் பெறாது என அறிவித்துவிட்டது; அதேசமயம், மிகவும் பின் தங்கியுள்ள நாடுகளுக்கு இந்தியா கடன் வழங்க முன் வந்துள்ளது. அதாவது, கடன் வாங்கும் நிலையில் இருந்தபோதும், கடன் கொடுக்கவும் இந்தியா முன்வந்திருப்பது, அதன் பொருளாதார பலமில்லையா?'' எனச் சில புள்ளி விவரங்களை வெளியிட்டு, இந்தியா உலக வங்கியின் அறிக்கையைப் பணிவோடு மறுத்துவிட்டது.

''இந்தியா நிதி நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது'' என உலக வங்கி மட்டும் சொல்லவில்லை. இந்திய ஆட்சியாளர்களும் இந்த நெருக்கடி பற்றிதான் தினந்தோறும் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஜெயலலிதாவும், வாஜ்பாயும் இந்த நிதி நெருக்கடியைக் காட்டிதான் உர மானியத்தை வெட்டினார்கள்; ரேசன் அரிசி விலையை உயர்த்தினார்கள்; இலவச மின்சாரத்தை நிறுத்தினார்கள்; அரசு ஊழியர்களின் மடியிலும் கை வைத்தார்கள்.

உலக வங்கி சுட்டிக் காட்டியிருப்பது போல இந்தியா மிகப் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அதே சமயம், இந்திய ஆட்சியாளர்கள் சுட்டிக் காட்டுவது போல, அதன் அந்நியச் செலாவணி கையிருப்பு உயர்ந்திருக்கிறது; சர்வதேசச் சந்தையில் இந்திய ரூபாயின் மதிப்பும் கூடியிருக்கிறது. அதாவது, இந்தியப் பொருளாதாரம் இன்று, ''ஒய்யாரக் கொண்டையின் வெளியே தாழம் பூவாம்; உள்ளே ஈறும் பேனுமாம்'' என்ற நிலையில் இருக்கிறது. இந்த தாழம்பூவைக் காட்டித்தான், உலக வங்கியின் ஆய்வறிக்கையை மைய அரசு மறுத்திருக்கிறது.

**நிதி நெருக்கடியைச் சமாளிக்க, விசைத்தறி மீது கலால் வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து ஈரோட்டில் நடந்த ரயில் மறியல் போராட்டம்.**



இப்பொழுது மட்டுமல்ல, கடந்த பத்தாண்டுகளாகவே, அந்நியச் செலாவணி கையிருப்பு உயர்ந்து வருவதைதான், இந்திய அரசு தாராளமயத்தின் அரும் பெரும் சாதனையாகக் கூறி வருகிறது. உலகமயத்தினால் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்து, அதனால் அந்நியச் செலாவணி கையிருப்பு உயரவில்லை. மாறாக,

www.padippakam.com



ஒருவேளை சோற்றுக்குத் தட்டேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள ஒரிசாவின் பழங்குடி இன மக்கள்.

இந்தியப் பங்குச் சந்தையில் சூதாட, அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் அமெரிக்கா டாலரைக் கொண்டு வந்து கொட்டுவதால்தான் அதிகரித்திருக்கிறது.

இந்தியப் பங்குச் சந்தையில் அமெரிக்கா டாலர்களை முதலீடு செய்துள்ள 500 அந்நிய முதலீட்டு நிறுவனங்களுள், 35 சதவீத நிறுவனங்கள் எப்போது வேண்டுமானாலும், இந்தியாவைவிட இலாபம் தரும் பங்குச் சந்தைக்குத் தாவி விடுவார்கள் என எச்சரிக்கிறது, இந்தியா டுடே. இந்த அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் திடீரெனத் தங்களின் முதலீட்டைத் திரும்பப் பெறும் பொழுது, அந்நியச் செலாவணிக் கையிருப்பு சடாரெனச் சரிந்து விழுந்து விடும் அபாயமுள்ளது. எனவே, இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு உயர்ந்திருப்பது வளர்ச்சியல்ல; அது, வீக்கம்.

நார்வே, டென்மார்க், நெதர்லாந்து ஆகிய சிறிய ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெறப்பட்டு வந்த உதவியைத்தான், இனி தேவையில்லை என மைய அரசு அறிவித்திருக்கிறது. இதற்குக்கூட, பொருளாதார வளர்ச்சி காரணமில்லை. இந்த ஐரோப்பிய நாடுகள் குஜராத்தில் நடந்த முசுலீம் இனப்படுகொலையைக் கண்டித்ததால், இந்துமத வெறி பிடித்த மைய அரசிற்கு 'ரோஷம்' பொத்துக் கொண்டு வந்து, உதவி தேவையில்லை என மறுத்து விட்டது. மிகவும் பின்தங்கிய நாடுகளில் இந்தியத் தரகு முதலாளிகளுக்கு வர்த்தக ஒப்பந்தங்களைப் பெற்றுத்தர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான், இந்த நாடுகளுக்குக் கடன் கொடுப்போம் என இந்தியா அறிவித்திருக்கிறது.

இப்படி கடன் கொடுக்கும் நாடாக 'வளரவுள்ள' இந்தியாவின் வெளிநாட்டுக் கடன், மார்ச் 2002-இல் 9800 கோடி அமெரிக்க டாலராக இருந்தது; அடுத்த ஒன்பதே மாதங்களில் 10,500 கோடி அமெரிக்கா டாலராக (தோராயமாக 5 இலட்சம் கோடி ரூபாய்) உயர்ந்து விட்டது.

தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், ஒவ்வொரு ஆண்டும் 1,000 கோடி டாலர் (தோராயமாக 47,000 கோடி ரூபாய்) அந்நிய முதலீட்டைத் தொழில்துறைக்குக் கொண்டு வருவோம் என மைய அரசு சபதமே போட்டிருந்தது. ஆனால், தாராளமயம் நடைமுறைக்கு வந்து ஒரு மாமங்கம் ஆன பின்னும் கூட, இந்தியாவை நோக்கி 300 கோடி டாலர் அந்நிய நேரடி முதலீடு வருவதே பெரும்பாடாக உள்ளது. இப்படி இந்தியாவில் நுழையும் அந்நிய நேரடி முதலீடும், புதிய புதிய தொழில்களைத் தொடங்கப் பயன்படுத்தப்படுவதில்லை. அதில் பெரும்பகுதி ஏற்கனவே இருக்கும் தொழில்களை நவீனப்படுத்தவும், இலாபம் தரும் பொதுத்துறை நிறுவனங்களை வாங்கவும் தான் பயன்படுகிறது என இந்தியா டுடே கூடப் புலம்புகிறது.

தனியார்மயம் - தாராளமயத்தின் பின் அரசுத்துறையில் வேலை வாய்ப்பு என்பதை ஊத்தி மூடிவிட்டார்கள். தரகுப் பெரு முதலாளிகளோ, ஆலைகளை நவீனப்படுத்துவது, உற்பத்திச் செலவைக் குறைப்பது என்ற நடவடிக்கைகளின் மூலம் தொழிலாளர்களை வீதிக்குத் துரத்துகிறார்கள். டாடாவின் ''டெல்கோ'' நிறுவனம் 2001-ஆம் ஆண்டில் மட்டும் 8,390 தொழிலாளர்களைத் தூக்கியடித்தது; அதே ஆண்டில் பஜாஜ் நிறுவனம் 3,394 தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்கியது.

இந்த ஆட்குறைப்பு விசயத்தில் பொதுத்துறை நிறுவனங்களும் தனியார் முதலாளிகளுக்குச் சளைத்ததாக இல்லை. பி.எச்.இ.எல். நிறுவனம் 2000 ஆண்டில் மட்டும் 13 சதவீதத் தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்கியிருக்கிறது. பொதுத்துறையின் கீழுள்ள 26 வங்கிகள், விருப்ப ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஒவ்வொரு வங்கியில் இருந்தும் 12.6 சதவீத ஊழியர்களைக் குறைத்துள்ளன.

தனியார்துறை, பொதுத்துறைகளை விட, விவசாயமும், சிறு தொழிலும்தான் இந்திய மக்களுக்கு மிகப் பெரிய அளவில் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து வந்தன. தாராள இறக்குமதி சிறு தொழில் துறையின் கழுத்தில் சுருக்காக விழுந்து விட்டது. விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு ஒரு ஆண்டில் 35 நாட்கள் தொடர்ந்து வேலை கிடைப்பது இப்பொழுது குதிரைக் கொம்பாகிவிட்டது.

தனியார்மயம் - தாராளமயத்தைத் தொடங்கி வைத்தபொழுது, ''அந்நிய முதலீடு வரும்; தொழில்துறை வளரும்; வேலைவாய்ப்புப் பெருகும்; தொழில்துறையைத் தனியாருக்கு விட்டுவிடுவதால், கல்வி, சுகாதாரம் போன்ற மக்களின் அடிப்படை பிரச்சினைகளில் அரசு கவனம் செலுத்த முடியும்'' என்றெல்லாம் ஆட்சியாளர்கள் அடுக்கியது, இன்று சீட்டுக் கட்டு சரிவது போல சரிந்து விழுந்து விட்டது. ஆனால், ஆட்சியாளர்களோ, அந்நியச் செலாவணி கையிருப்பும், ரூபாயின் மதிப்பும் உயர்ந்திருப்பதைக் காட்டி தனியார்மயம் - தாராளமயத்தின் தோல்வியை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள்.

இந்தியப் பொருளாதார வளர்ச்சி குறித்து ஒருவரின் காலை மற்றொருவர் வாரி விடும் மைய அரசும், உலக வங்கியும் ஒரு விசயத்தில் ஒன்று படுகின்றன. தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்துவது, மதிப்புக் கூட்டு வரியை அமுல்படுத்துவது, அரசு பெட்ரோலிய நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவது ஆகிய இரண்டாம் கட்ட சீர்திருத்தங்களை விரைவாகச் செய்து முடித்தால்தான் இந்தியா முன்னேறும் என்கிறார்கள்.

1991-இல் ஏற்பட்ட நிதி நெருக்கடியைக் காட்டிக் கொண்டு வரப்பட்ட முதல் கட்ட சீர்திருத்தம் இந்தியாவை அதைவிட பெரிய நெருக்கடிக்குள் சிக்க வைத்துவிட்டது என்றால், இரண்டாம் கட்ட சீர்திருத்தம் இந்தியாவை எங்கு கொண்டு போய் நிறுத்தும்?

● ரஹீம்

www.padippakam.com

# கிசுகிசு பத்
# எழுத்து

''விபச்சார வழக்கில் நடிகை வினிதா கைது, உல்லாசத்துக்கு ரூ. ஒன்றரை லட்சம் பேரம்'', ''விடியற் காலை விபச்சார கைதுகள், நூலி ழையில் தப்பிய முன்னாள் அமைச்சர்'', ''சிக்கிய டைரி, நடிகைகள் ஆல்பம், பெயர்கள் அம்பலம்'' - காலாவதியான வயாகரா மாத்திரைக ளுக்கு இணையானவை இவைகள். இப்போது புலனாய்வு பத்திரிக்கைகள்




என்ற போர்வையில் கடைகளில் தொங்குகின்றன.

முன்னாள் அமைச்சர் விபச்சார வழக்கில் நூலிழையில் தப்பித்தாரா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் இந்த புலனாய்வு பத்திரிக்கைகளின் வாசகர்கள், ஷகிலா ரசிகர்கள் என்ற அடைமொழியிலிருந்து மயிரிழையில் தப்பிக்கிறார்கள் என்பது மட்டும் தெரி கிறது.

ஜனநாயகத்தைத் தாங்கி பிடிக்கும் நான்காவது தூணாகப் போற்றப்படும் செய்தி ஊடகங்களான இச்சந்தை பத்தி ரிக்கைகள் எழுத்து விபச்சாரத்தில் நிர்வாணமாக ஓடி கவனத்தைக் கவரு கின்றன. விபச்சாரத்தில் பிடிக்கப்படும் நடிகைகள் முகத்தை மூடிக் கொண்டு வருவதுபோல, இவைகளும் புல னாய்வு, அரசியல், சமுதாயம் என்ற பெயர்களில் தங்கள் முகத்தை மூடிக் கொண்டு வாசகனிடம் வருகின்றன. இதன் மூலம் சமூகத்தைச் சுரண்டிக் கொழுக்கும் ஆதிக்க, தரகு கும்பல் களின் சீரழிவுகளை மக்களிடம் பரப்புக் கின்றன. இவ்வணிகப் பத்திரிக்கைக ளுக்கு பாரிய அரசியல், பொருளாதார சமுதாய பிரச்சினைகள், உடனே விற்றுத் தீரும் சூடான சரக்கல்ல; எனவே இச்செய்திகள் இவர்களுடைய விரிவான புலனாய்வுக்கு உகந்தவை யல்ல.

உதாரணத்திற்கு கடந்த ஒரு மாதத்தில் பார்ப்பன பாசிச மத்திய, மாநில அரசுகளால் நசுக்கி அழிக்கப் பட்ட ஜனநாயக உரிமைகள் ஏராளம். அவை அநாதை பிணங்கள் போல் சந்தடி இல்லாமல் சவக்குழிக்குள் புதைக்கப்பட்டன.

● போராடிய அரசு ஊழி யர்கள் - ஆசிரியர்கள் பாசிச ஜெயா அரசால் வக்கிரமான முறையில் ஒடுக்கப்பட்டனர். 13 லட்சம் அரசு ஊழியர்களின் 119 சங்கங்கள் மற்றும் அவற்றின் 260 சார்பு சங்கங்களும் இர வோடு இரவாகத் தடை செய்யப் பட்டன.

● பெரும்பான்மையான உழைக் கும் மக்களுக்கு, மாதம் ரூபாய் 5000 வருமானம் வரும் குடும்பங்களுக்கு இனி ரேஷனில் அரிசி கிடையாது. இனி அவர்கள் கவுரவ குடும்பமாக அழைக்கப்படுவார்கள்; எனவே அவர்கள் ஏழ்மையை அரசிடம் சொல்லக் கூடக் கூடாது.

● சென்னையில் உள்ள பொழுது போக்கு இடங்கள் மற்றும் பூங்காங்க ளுக்கு வரும் குடும்ப நபர்கள், இளை ஞர்கள் மற்றும் மாணவர் - மாணவி களை ஒழுக்கங் கெட்டவர்கள் என்று பட்டம் கட்டி, அவர்களின் படங் களைப் பத்திரிக்கைகளில் வெளியிட்டு மிரட்டுகிறது போலீசு. இதன் மூலம் மக்கள் பொது இடங்களில் நடமாடும் உரிமையையும் பறிக்கிறது.

● சென்னை - மெரினா கடற்க ரையை அழகுபடுத்துவதாகக் கூறி, அவ்விடங்களை தேசங்கடந்த தொழில் நிறுவனங்கள், தூதரகங்கள், சர்வதேச நிதி மூலதன தரகர்கள் - இவர் களுக்குத் தாரை வார்க்க ஜெயா அரசு தயாராகிவிட்டது. அலுவலகங்கள் என்ற பெயரில் அங்கு தரகு கும்பல் களின் மாளிகைகள் எழுப்பப்படும். உலக வங்கியின் இந்த உத்திரவுதான் இப்போது சீரணி அரங்கம் முதலாக பல கட்டிடங்களின் நள்ளிரவு இடிப்பு களாகத் தொடர்கின்றன. அடுத்து, கடற் கரையை ஒட்டிய மீனவர்களின் வாழ்விடங்கள் தொடர்ச்சியாக பறிக் கப்படும். இதற்கு முன்னோட்டமாக மீனவர்களின் படகுகள், வலைகள் அவர்களைக் கொண்டே அகற்றப்படு கின்றன. வீரமணியைச் சுட்டுக் கொன்ற கையோடு, மீனவர்களிடம் போலீசு பீதியைக் கிளப்பி, இவ்வே லையில் இறங்கி விட்டது ஜெயா அரசு.

● பா.ஜ.க. அரசின் அனைத்துக் கறுப்புச் சட்டங்களின் பரிசோதனைக் களமாக தமிழகத்தை மாற்றுவது; இதன்மூலம், பார்ப்பன பாசிஸ்டுகளின் முன்னுதாரணமிக்க அரசாகவும், அதன் தலைவியாகவும் வலம் வருவது என்று பாசிச ஜெயா ஆட்டம் போடு கிறார்.

— இப்படி பாசிச ஜெயாவின் ஆட்சி, பேயாட்சியாக தலைவிரித்தா டுவதை, ஜனநாயகத்தின் நான்காவது தூண்களான புலனாய்வுப் பத்திரிக் கைகள், அரசின் ஜனநாயக விரோத தன்மைகளை மேலோட்டமாக கூட வாசகர்களுக்குப் புரிய வைப்ப தில்லை.

ஆனால், மறுபுறம் ''விடியற்காலை விபச்சார கைது''களை அடி முதல் நுனி வரை ஆராய்ந்து ஜூனியர் விகடன் வெளியிட்டிருக்கும் கட்டுரையின் ஒரு பத்தி மட்டும் இது:

'' அன்வர் ஷா (விபச்சார





படிப்பகம்

# ரிகைகளின்
# பச்சாரம்

தரகன்) கை அசைக்க, இன்ஸ்பெக்டர் ராஜேந்திரனுடன் (வெளிநாட்டு கஸ்டமர் வேடத்தில் இருந்தாராம்) வினிதா ஓர் அறைக்கு செல்ல... அம்மாவும் தம்பியும் உடன் சென்றிருக்கிறார்கள். அங்கே பேரம் ஆரம்பமாகியிருக்கிறது. ஒரு பெரிய தொகையை வினிதா கேட்க... அவரது அம்மாவோ 'இன்னும் கேள்' என்று வினிதாவின் இடுப்பில் கிள்ளி ரேட்டை அதிகப்படுத்தச் சொல்லியிருக்கிறார். தம்பியோ தன் பங்குக்குத் தனியாக ஒரு தொகையைக் கேட்க இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் ஆடிப் போயிருக்கிறார்(?) ரேட்டெல்லாம் பேசி முடித்த பிறகு, தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து சர்வ சாதாரணமாக ஆணுறைகளை எடுத்து மெத்தையில் போட்டிருக்கிறார் வினிதா. அடுத்த நிமிடமே அவர்கள் அனைவரையும் கைது செய்தது போலீசு'' (ஜூ.வி. 20.8.03). இதில் புலனாய்வும் இல்லை, புடலங்காயும் இல்லை. நடிகையின் படுக்கையில் வாசகனையும் தள்ளி கிளுகிளுப்பூட்டுகிறது, ஜூனியர் விகடன்.

இன்னொரு சந்தை பத்திரிக்கையான நக்கீரனோ, ''ஸ்டார் புரோக்கரிடம் சிக்கிய டைரி, நடிகைகள் ஆல்பம்'' என்று விபச்சாரக் கதையை விலாவாரியாகச் சொல்கிறது. கட்டுரையின் முன்னுரையில் போலீசின் செயல்பாடுகளுக்கு தான் உள்நோக்கத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக உதார்விட்டு, பிறகு சந்தடி இல்லாமல் சந்தை விதிக்குத் திரும்பி விடுகிறது. ''டைரியையும் ஆல்பத்தையும் புரட்டப் புரட்ட போலீசிற்கே ஷாக்'' என்று விபச்சார தொழிலையே வினிதா மூலம்தான் போலீசு தெரிந்துக் கொண்டது போல் கதைக்கிறது. கிளுகிளுப்புக்கு வினிதா சரக்கு போதவில்லை என்று வாசகன் ஓடிவிடக் கூடும் என்று தனது வழக்கமான 'காக்டெயில்' பாணி கலவை சரக்கை மற்ற பக்கங்களில் தயாராக வைத்திருக்கிறது. ''கொக்கரக்கோ'', ''பைரவி நடிகையின் வாக்குமூலம்'' என்று வாசகனை ஒரே நேரத்தில் பல பக்கங்களுக்கு - கட்டில்களுக்கு துரத்தி திக்கு முக்காட வைக்கிறது.

இதே பாணியில் - குமுதம், ஆனந்த விகடன் குடும்பப் பத்திரிக்கைகளும், தினமலர் போன்ற பார்ப்பன தினசரிகளும் இச்செய்திகளைப் பல கோணங்களில் வெளியிட்டன.

இப்பத்திரிக்கைகள், வினிதா விபச்சார வழக்கு செய்திக்கு முன் ''என் கௌண்ட்டர் சீஸன்'' செய்திகளை வழங்கின.

''வீரமணி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் சென்னையிலுள்ள ரௌடிகளின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. போலீசின் அடுத்த குறி நாமாக இருக்குமோ என்று அஞ்சிக் கிடக்கிறார்கள்.'' ''புதிய கமிசனராக விஜயகுமார் பதவியேற்ற பிறகு, வீரமணியால் சென்னைக்குள் வாலாட்ட முடியவில்லை'' என்றெல்லாம் போலீசை சீராட்டினார்கள். இதே மாதிரிதான் எம்.ஜி.ஆர். காலத்தில் வால்டர் தேவாரம், மோகன்தாஸ் கும்பலையும் குளிப்பாட்டினார்கள். போலீசு கும்பலின் ஊரறிந்த பழிவாங்கல், படுகொலைகளைக் கூட தமிழகத்தைக் காப்பாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கையாக சித்தரித்தார்கள்.

ரௌடி வீரமணியின் படுகொலையில், ஊரறிந்த உண்மையை இவர்கள் கேள்வி கேட்கவில்லை. மிகப் பெரும் ரௌடி என்று அம்பலப் பட்டுப் போன வீரமணியைக் கூட சட்டப்படி தண்டிக்க வக்கற்ற மிகப் பெரும் கிரிமினல் கும்பல்தான் போலீசு. வீரமணியை அவனுக்குத் தெரியாமல் சுட்டு விட்டு புல்தரையில் பதுங்கி ஓடி, தயாராக இருந்த வண்டியில் ஏறி போலீசு நிலையத்தில் பதுங்கிக் கொண்டு பத்திரிக்கைகளுக்கு பேட்டி கொடுத்தது, போலீசு. இதில் வேடிக்கை என்னவென்றால் இதையும் போலீசு சொன்னதாகவே இவர்கள் சொன்னார்கள்.


என்கௌண்டர் சீசனுக்கு முன் அண்ணாச்சி சீசன். சரவணபவன்




சங்கிலித் தொடர் ஓட்டல் முதலாளி ராஜகோபால் பற்றி ''எனக்கு ஜீவஜோதிதான் வேணும் - அடம் பிடிக்கும் அண்ணாச்சி'', ''தொட்டவன் கெட்டவனான கதை'', ''அடுத்த ஸ்டெப் அரசியல்தான் அண்ணாச்சி ராஜகோபால் ஆர்ப்பரிப்பு'' என்று எழுதினார்கள். பேராசை, பெண் பித்து, கூடவே கடவுள் பக்தி இவற்றின் உருவம்தான் ராஜகோபால். இவரை அண்ணாச்சி ஆக்கி, தொழிலாளியின் தோழனாக இப்பத்திரிக்கைகள் எழுதிய கதைகள் ஏராளம்.

இன்னும் ''கஞ்சா அழகி செரினா'' ''செக்ஸ் டாக்டர் பிரகாஷ்'' இப்படி ஓராயிரம் சூடான - சுவையான செய்திகளுக்கு வற்றாத ஊற்றாக இருக்கிறது தமிழகம்.

அதேசமயம் குடிநீர், கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை பிரச்சினைகளுக்காக குக்கிராமங்களிலிருந்து பெருநகரங்கள் வரை, தொடர்ந்து மக்கள் போராடுகின்றனர். ஆளும்



## புதிய ஜவுளிக் கொள்கை, கலால் வரியைக் கண்டித்து பு.மா.இ.மு. அரங்கக் கூட்டம்

உலக வங்கியின் கைக்கூலிகளாக செயல்பட்டு வரும் மத்திய, மாநில அரசுகளின் புதிய ஜவுளிக் கொள்கை மற்றும் கலால் வரியைக் கண்டித்து புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி கடந்த ஜூலை 4-ஆம் தேதி கண்டனப் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடத்த திட்டமிட்டனர். இதனையொட்டி, சுவரெழுத்து, சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டனர். ஆனால், குறிப்பிட்ட தேதியின் போது ஏற்கெனவே கொடுத்திருந்த அனுமதியை அரசு ஊழியர் - ஆசிரியர் போராட்டத்தைக் காரணம் காட்டி ரத்து செய்துவிட்டது போலீசு.

நீண்ட போராட்டத்துக்குப் பின் ஜூலை 25-ம் தேதி மீண்டும் நடத்திக் கொள்ள அனுமதித்த போலீசு, திடீரென்று அன்றைய முன் தினம் பேரணிக்கு அனுமதிக்க முடியாது என்று முதலிலும், பின்னர் பொதுக் கூட்டத்தையும் அனுமதிக்க முடியாது என்றும் படிப்படியாக மறுத்துவிட்டது.

பாசிச ஜெயாவின் விசுவாசிகளாக செயல்படும் தமிழகப் போலீசின் இத்தடைகளை மீறி குறிப்பிட்ட தேதியிலேயே போலீசு நிலையத்துக்கு எதிரில் அரங்கக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்திற்கு தோழர். சசி தலைமையேற்க வி.வி.மு. தோழர் சிவகாமு சிறப்புரையாற்றினார். இறுதியில் நடைபெற்ற ம.க.இ.க.வின் புரட்சிகர கலைநிகழ்ச்சி கைத்தறி, விசைத்தறி தொழில் நசிந்து வருவது பற்றியும், நாடு மறுகாலனியாவதையும் அம்பலப்படுத்தி, திரண்டு வந்த உழைக்கும் மக்களிடையே புதிய நம்பிக்கை ஊட்டும் விதமாக அமைந்தது.

*தகவல்: பு.மா.இ.மு., ஈரோடு*

ஓட்டுப் பொறுக்கிகள் கடந்த 50 ஆண்டு காலமாக மாறி மாறி இப்போராட்டங்களை அடக்குவதை, இப்பத்திரிக்கைகள் எப்போதாவது தொகுத்து புலனாய்வு செய்திருக்கிறதா? அப்போராட்டங்களையும் அதற்காக போராடுபவர்களையும் திட்டமிட்டு இருட்டடிப்பு செய்கின்றன. அதிகம் போனால், அச்செய்திகளை வாலும் தலையும் இல்லாமல் தேங்காய் சில்லுகளாக்கி வாசகனுக்குக் கொரிக்கக் கொடுக்கின்றன. அங்கும் சாவு, கொலை என்று ஏதாவது ரத்தக் கவிச்சி இருக்க வேண்டும். அப்போது தான் அந்த புலனாய்வு ஈக்கள் வரும். பிறகு, அதையே தொலைக்காட்சித் தொடர்போல் கண்ணீர் சிந்தும் கதையாக்கி காசு பார்ப்பார்கள்.

பார்ப்பன பாசிச ஜெயா அரசின் ஆயுதக் கிடங்கில் இம்மாதிரியான சந்தைப் பத்திரிக்கைகள் அணிவகுத்து நிற்கின்றன. இருந்தும், சில நேரங்களில் இவர்கள் மீது ஜெயா அரசால் தொடுக்கப்படும் நெருக்குதல்கள், வழக்குகள், அடக்குமுறைகளைக் காட்டி, தாங்களும் ஜனநாயகத்தின் பக்கம் நிற்பதாகக் காட்டுகின்றனர். ஆனால் உண்மையோ வேறாக இருக்கிறது. ஜனநாயகத்தை நேசிக்கும் பத்திரிக்கையாளர்கள் - பத்திரிக்கை நிறுவனங்கள் அல்ல - ஆட்சியாளர்களின் கடைக்கண் பார்வை பெற எழுத மறுத்த குற்றத்திற்காக அந்நிறுவனங்களிலிருந்து துரத்தப்படுகிறார்கள். இதையும் மீறி இப்பத்திரிக்கை நிறுவனங்கள் சந்திக்கும் அடக்குமுறைகள் என்பது, பதவியிழந்த கட்சிகள் அரசிடம் சந்திக்கும் வழக்கமான நாய்ச்சண்டை ரணங்கள்தான். இவைகள் பத்திரிக்கை சுதந்திரத்துக்குக் குரல் கொடுத்ததால் கிடைத்த விழுப்புண்கள் என்பது பம்மாத்து.

பத்திரிக்கை என்றால் இவர்கள் சூத்திரம் என்ன? சினிமா நடிகைகளின் கட்டில் கிசுகிசுக்கள், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி கும்பல்களுக்குள் நடக்கும் பதவிப் போட்டி சதிகள், கொலை, சாவு, விபச்சாரம், கள்ளக்காதல் மற்றும் கற்பழிப்பு போன்ற இருட்டறை விவகாரங்களைத் தவிர வாசகனுக்கு வேறு எதையாவது சொன்னது உண்டா? ஆளும் வர்க்கம் மற்றும் ஆதிக்க கும்பல்களின் கழிவுகளைத் தள்ளிவிடும் கழிப்பறையாகத்தானே வாசகனின் மூளையைப் பயன்படுத்துகிறார்கள்!

பரந்துபட்ட மக்களின் வாழ்க்கையைச் சூறையாடும் ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சீரழிவுகளை வாசகனுக்குப் புரியவைக்கும் ஜனநாயக நடவடிக்கைகளை எப்போதாவது இவர்கள் அங்கீகரித்து இருக்கிறார்களா? புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களைப் பற்றி அரசும் ஆளும் வர்க்கங்களும் என்ன சொல்கிறதோ அதையேதான் இவர்களும் சொல்கிறார்கள்.

''தமிழ் மக்களின் நாடி துடிப்பு'', ''நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே!'' என்று சினிமா கதாநாயகன் போல வசனம் பேசுகின்றன இச்சந்தை பத்திரிக்கைகள். ஆனால், தம் வாசகர்களைச் சமுதாய அறிவற்ற மடையர்களாகவும் அநீதிகளைக் கண்டு மிரளும் கோழைகளாகவும் கருணைக்கு ஏங்கும் பாவிகளாகவும் மாற்றும் ஆளும் வர்க்க அறிவுச் சேவையையே செய்கின்றன. தமிழர்களின் சுயமரியாதையைக் கீழறுத்துப் போடும் இப்பத்திரிக்கைகளை நாம் ஒன்று சேர்ந்து புறக்கணித்தால் தான், நமக்கான அறிவை நாம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

● பச்சையப்பன்

## தோழர் நல்லுவின் நினைவை நெஞ்சிலேந்தி... போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி...

உசிலம்பட்டி பகுதி ஆரியப்பட்டி கிளை விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பில் போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி தோழர் நல்லுவின் இரண்டாமாண்டு நினைவஞ்சலி பொதுக் கூட்டம் ஆகஸ்ட் 15-இல் நடந்தேறியது. பகுதியின் வறட்சி காரணமாக பொதுக்கூட்டச் செலவிற்கு வசூல் செய்ய இயலாத நிலைமை இருந்த போதிலும், மக்கள் உணர்வோடு சிரமம் கருதாமல் பேராதரவு தந்தார்கள். ஆகஸ்ட் 15-ம் நாள், மாலை 7 மணி அளவில் ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன், தோழர் நல்லுவின் நினைவுத்தூண் கம்பத்தில் கொடியேற்றினார். பின்னர் நடந்தப் பொதுக் கூட்டத்தில் ஆரியபட்டி கிளை செயலாளர் தோழர் பாண்டி தலைமை தாங்க தோழர், கதிரவன், தோழர் சிவகாமு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மறுகாலனியாதிக்கத்திற்கு எதிராகவும், அதற்கு அடிபணியும் ஜெயலலிதாவை அம்பலப்படுத்தியும் தோழர்கள் பேசியது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. அல்லிராணி ஜெயலலிதாவின் பார்ப்பன அடக்குமுறை திமிரையும், உலக வங்கி கைக்கூலித்தனத்தையும் அம்பலப்படுத்திய மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் புரட்சிகர கலைநிகழ்ச்சி போராட்ட உணர்வை ஊட்டியது.

*தகவல்: வி.வி.மு., உசிலை வட்டம்.*

www.padippakam.com

### ஈராக்:

# ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் வலுக்கிறது

பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகவும், உலகின் அமைதிக்கு சவாலாக இருப்பதாகவும் அறிவித்து 'சர்வாதிகாரி' சதாம் ஆட்சியை வீழ்த்துவதற்கு ஈராக் மீதான ஆக்கிரமிப்பு போரைத் தொடங்கின அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள். 'பேரழிவு ஆயுதங்கள்' என்ற இட்டுக்கட்டிய பொய் அம்பலமாகி அமெரிக்காவும் இங்கிலாந்தும் உலக மக்களிடமிருந்து தனிமைப்பட்டுள்ள நிலையில், ஈராக்கில் வெடித்துக் கிளம்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களும், தாக்குதல்களும் அந்நாடுகளுக்கு மேலும் பேரிடியாக இறங்குகிறது.

● ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள ஐ.நா. தலைமையகத்தின் மீது ஆகஸ்டு 19-ஆம் தேதி வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட லாரியைக் கொண்டு தற்கொலை படை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஐ.நா.வின் உயரதிகாரியான செர்ஜியோ வைபிரா டி மெலோ உட்பட இருபதுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்.

● ஆகஸ்டு ஏழாம் தேதி பாக்தாத்திலுள்ள ஜோர்டான் நாட்டின் தூதரகத்தின் மீது நடந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். இது, சதாம் அரசின் வீழ்ச்சிக்குப் பிறகு நடந்த முதல் மிகப் பெரிய தாக்குதல் என்று கூறப்படுகிறது.

● ஆகஸ்டு ஒன்பதாம் தேதி ஈராக்கின் தெற்கு நகரமான பஸ்ராவில் ஈராக் மக்களுக்கும் இங்கிலாந்து படைகளுக்கும் நேரடியான மோதல் வெடித்தது. ஆக்கிரமிப்பு போருக்குப் பின் ஈராக் முழுவதும் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சீர்குலைவினால், பஸ்ரா நகர் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியது. உலகின் இரண்டாவது மிகப்பெரிய எண்ணெய் வளமிக்க நாடான ஈராக்கில் எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்து கிடந்தனர். எரிபொருளோ கள்ளச் சந்தை விலையில் விற்கப்பட்டது. இதனால் ஆத்திரமுற்ற இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் அமெரிக்கா - இங்கிலாந்து படைகளுக்கு எதிராக முழக்கமிட்டு வீதிகளில் திரண்டனர். இங்கிலாந்து படையினரைக் கற்களால் தாக்கத் தொடங்கினர். டயர்களை எரித்து இராணுவ டாங்கிகள் மீது வீசினர்.

● வடக்கு நகரமான கிர்குக்கில் ஆகஸ்டு ஒன்பதாம் தேதி ஈராக் சிவிலியன்களுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் ஏற்பட்ட மோதலில் இரண்டு அமெரிக்க படைவீரர்கள் படுகாயமுற்றனர். ஜூலை 31-ஆம் தேதி இதே கிர்குக் நகரில் இரு அமெரிக்க படையினர் கொல்லப்பட்டனர்.

● மார்ச் 20-ஆம் தேதியிலிருந்து ஜூலை 9-ஆம் தேதிவரை அமெரிக்க படையினர் 212 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும், 1044 வீரர்கள் படுகாயமுற்றிருப்பதாகவும் அதிகாரபூர்வமான தகவலை அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது. சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்க படைவீரர் கொல்லப்படுவதும், சிறியதும், பெரியதுமாக குறைந்தபட்சம் 13 தாக்குதல்களையாவது அமெரிக்க - இங்கிலாந்து படைகள் எதிர்கொள்வதும் அன்றாட நிகழ்வுகளாகி உள்ளன.

இந்த விவரங்கள் எல்லாம் ஈராக்கில் ஏகாதிபத்திய எதிர்ப்பு போர் நாளுக்கு நாள் முன்னேறி வருவதையே காட்டுகின்றன. பாக்தாத், பஸ்ரா, கிர்குக் முதலான முக்கிய நகரங்களில் மட்டுமின்றி, ஈராக்கிலுள்ள சிறு நகரங்கள் வரை அமெரிக்க எதிர்ப்புணர்வு மையங் கொண்டுள்ளது.

ஈராக்கில் சதாமின் வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு பொம்மை ஆட்சியை நிறுவி தன் ஆதிக்கத்தை உறுதிப் படுத்திக் கொள்ள துடிக்கிறது புஷ் நிர்வாகம். அதற்காகவே தனது அடிவருடியான சலாபியை முன்நிறுத்தியது. ஆனால், ஈராக் மக்களோ அமெரிக்கப்படைகள் ஈராக்கில் இருப்பதையும், அமெரிக்காவால் முன்மொழியப்படும் எந்த நிர்வாக அமைப்பையும் ஏற்க முடியாதென்பதையும் வெளிப்படையாக தெரிவித்து வருகின்றனர். பாக்தாத் நகர வீதிகளில் அமெரிக்காவுக்கு எதிரான மாபெரும் பேரணிகள் நடத்தப்படுகின்றன. இதனால், ஆப்கானைப் போல ஒரு பொம்மை அரசை நிறுவ விரும்பிய அமெரிக்காவின் கனவு பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளது.

ஷியா, சன்னி, குர்திஷ் இன மக்களிடையே மோதலை உருவாக்குவதன் மூலமும், சதாமின் அதிருப்தியாளர்களைக் கொண்டு கலகத்தைத் தூண்டியும் தான் நினைத்ததைச் சாதித்துக் கொள்ள விரும்பியது அமெரிக்கா. ஆனால் ஈராக்கில் உள்ள நிலைமையோ இதற்கு நேர்மாறாகவே அமைந்து வருகிறது.

சதாம் ஆட்சியின் போது சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்கள், சதாமின் பாத் கட்சியை சேராதவர்கள் கூட அமெரிக்காவை எதிர்த்து நிற்கின்றனர். மேலும், சவுதி அரேபியா, ஈரான், கதார் நாடுகளிலிருந்து அமெ

பஸ்ராவில் இளைஞர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறும் பிரிட்டிஷ் படையினர்.



ரிக்க எதிர்ப்பாளர்கள் ஈராக்குக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர். அமெரிக்க இங்கிலாந்து படையினரோ இவர்களைத் தடுக்க திராணியற்று முழிபிதுங்கிப் போயுள்ளனர்.

சதாம் வீழ்ச்சிக்குப் பிறகு, அமெரிக்க - இங்கிலாந்து கூட்டணி படையினரால் நிர்வாகத்தைச் சீரமைப்பதையோ, பொங்கி வரும் எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தவோ முடியாத நிலையில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் இராணுவத்தை அனுப்பும்படி அமெரிக்கா நிர்பந்தித்து வருகிறது. மறுபுறம், ஐ.நா. உதவியுடன் புதிய நிர்வாக அமைப்பைக் கட்டியமைக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவில், வியட்நாம் ஆக்கிரமிப்பு போரின் போது நடைபெற்றதைப் போல், ஈராக்கில் தொடர்ந்து இராணுவத்தை நிறுத்தி வைத்திருப்பதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடங்கியுள்ளன. சமீபத்தில் நியூஸ்வீக் ஆங்கில ஏடு அமெரிக்காவில் நடத்திய கருத்துக் கணிப்பில் 48 சதம் மக்கள் ஈராக்கிலிருந்து இராணுவத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று தெரிவித்துள்ளனர். பாக்தாத்தில் ஐ.நா மன்றத்தின் மீது நடந்த தாக்குதலுக்குப் பிறகு புஷ் நிர்வாகத்துக்கு எதிரான இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் பெருகி வருகின்றன.

'பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஆப்கானை முற்றுகையிட்டு பொம்மையரசை நிறுவிய இரண்டாண்டுகளுக்குப் பிறகும், அமெரிக்கா அந்நாட்டு மக்களை எதிர்கொள்ள முடியாமல் திணறுகிறது. ஈராக்கிலும் அதே நிலைமைதான். ஈராக்கிலுள்ள கடைசி ஒரு மனிதன் கூட அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை ஏற்கத் தயாரில்லை என்பதை வெளிப்படுத்திக் கொள்கிறான். வெடிகுண்டுகள் நிரம்பிய டாங்கிகளை எதிர்த்து தன் வெறுங் கைகளை ஆவேசத்துடன் உயர்த்தி முழக்கமிடுகிறான்.

திரண்டெழும் மக்கள் சக்தியின் முன் ஏகாதிபத்திய இராணுவம் வெறும் காகிதப் புலிதான் என்ற மாவோவின் கூற்று மீண்டுமொரு முறை நிரூபிக்கப்பட்டு வருகிறது. ஈராக்கில் விழுந்து கொண்டிருக்கும் அமெரிக்கப் படையினரின் பிணங்களே அதற்கு சாட்சி.

● கவி

## லைபீரியா:


# சாவு வியாபாரிகள் திணித்த 'சமாதானம்'

தெருவெங்கும் இரத்த வெள்ளம்; குண்டுகளால் துளைக்கப்பட்ட கட்டிடங்கள்; உயிருக்கு அஞ்சி அகதிகளாக ஓடும் மக்கள்; கைகளிலே அதிநவீன எந்திரத் துப்பாக்கிகளுடன் அச்சுறுத்தும் படைவீரர்களாக இளஞ்சிறுவர்கள்; கேள்விமுறையின்றித் தொடரும் கொலைகள், சூறையாடல், பாலியல் வன்முறைகள்; மேற்கு ஆப்பிரிக்காவின் சின்னஞ்சிறு நாடான லைபீரியா, உள்நாட்டுப் போரில் சிக்கி குருதிச் சேற்றில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

மேற்கு ஆப்பிரிக்காவில் அட்லாண்டிக் பெருங்கடலை ஒட்டியுள்ள லைபீரியாவை, 1847-இல் அமெரிக்காவிலிருந்து விடுதலை பெற்ற கறுப்பின அடிமைகள் உருவாக்கினர். அன்றிலிருந்து லைபீரியா, அமெரிக்காவின் விசுவாசமிக்க அடிமை நாடாகவே உள்ளது. கோகோ, பருத்தி, வாழை - என விவசாய உற்பத்தியும் ஏராளமான கனிமவளமும் வைரச் சுரங்கமும் கொண்டுள்ள நாடாக இருந்த போதிலும், ஏகாதிபத்தியங்களின் சூறையாடலால் அந்நாடும் மக்களும் இன்னமும் வறுமையிலேயே உள்ளனர்.

நிலச் சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்படாததால் பழங்குடியின சமூகக் கட்டுமானமும் உள்ளூரளவில் பழங்குடியின பொருளாதாரமுமே லைபீரியா உள்ளிட்ட பல மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் நிலவுகிறது. ஒரு பழங்குடி இனத்தின் ஆதரவோடு ஒரு யுத்தப் பிரபுவோ அல்லது ஒரு இராணுவ / பாசிச சர்வாதிகாரியோ அதிகாரம் செலுத்துவதும், தமது சூறையாடலுக்கு ஆபத்து இல்லாத பட்சத்தில் ஏகாதிபத்திய நாடுகள் இவற்றை அங்கீகரிப்பதும் ஆப்பிரிக்க நாடுகளில் நீடித்து வருகிறது.

அந்த வகையில் லைபீரியாவின் பாசிச சர்வாதிகார அதிபர் சாமுவெல் டோவை இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் தூக்கியெறிந்து விட்டு, பழங்குடியின ஆதரவு பெற்ற யுத்தப் பிரபுவான சார்லெஸ் டெய்லர் 1989-இல் அதிகாரத்துக்கு வந்தார். அமெரிக்காவின் ஆசியோடு உள்நாட்டில் பாசிச பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்ட அவர், மேற்கு ஆப்பிரிக்காவில் அமெரிக்காவின் நம்பகமான அடியாளாகத் தன்னை நிரூபித்துக் காட்டவும், மேற்கு ஆப்பிரிக்காவின் முக்கியத் தலைவராக தன்னை உயர்த்திக் கொள்ளவும் இதர அண்டை நாடுகளின் விவகாரங்களில் தலையிடத் தொடங்கினார். தமக்கு விசுவாசமான, ஆதரவான யுத்தப் பிரபுக்களை ஆதரித்து அண்டை நாடு



களில் படுகொலைகளைக் கட்ட விழ்த்து விட்டார். பழங்குடியினருக்கு இடையிலான பிளவு - மோதல் களையும் அறியாமை - பின் தங்கிய நிலைமைகளையும் சாதகமாக்கிக் கொண்டு, அண்டை நாடுகளின் அரசு எதிர்ப்பு யுத்தப் பிரபுக்களோடு சேர்ந்து அடுத்தடுத்து போர் தொடுத்தார்.


தற்போது லைபீரியாவில் அதிபர் சார்லஸ் டெய்லரின் படைகளுக்கும், டெய்லரை எதிர்க்கும் லைபீரிய ஜனநா யகத்துக்கான இயக்கம் (MODEL) லைபீ ரிய சமரசம் - ஜனநாயகத்துக்கான ஒற்றுமை இயக்கம் (LURD) ஆகிய அமைப்புகளின் படை களுக்குமிடையே நடக்கும் உள்நாட்டுப் போர், அந்நாட் டுடன் மட்டும் வரம்பிட்டுக் கொள்ளும் விவகாரமல்ல. அது இதர மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுடன் பிரிக்க முடி யாத விவகாரமாகும்.

1989-இல் சார்லஸ் டெய்லர் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங் கியபோது, அதைத் தடுக்க அண்டை நாடான கினியா தனது படைகளை அனுப்பி யது. டெய்லர் அதிகாரத்துக்கு வந்த பிறகு, கினியாவுக்கு விரைவில் பாடம் புகட் டுவேன் என்று எச்சரித்தார். கினியாவின் அரச எதிர்ப்பு யுத்தப் பிரபுக்களுக்கு பயிற் சியும் ஆயுத உதவியும் அளித்துச் சீர்குலைவு - சதி வேலைகளில் ஈடுபட்டு வந்தார்.

இதேபோல, டெய்லரின் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைத் தடுக்க படைகளை அனுப்பிய அண்டை நாடான சியாரா லியோனுக்குப் பாடம் புகட்ட, அந்நாட்டு அரச எதிர்ப்பு யுத்தப் பிரபுவான சாங்கோவுக்கு ஆத ரவாகத் தனது படைகளை அனுப்பிய டெய்லர், சாங்கோவுடன் சேர்ந்து சியாரா லியோனின் வைரச் சுரங்கங் களைக் கைப்பற்றிக் கொள்ளை யடித்தார்.

சியாரா லியோனில் அரச படை களுக்கும் சாங்கோ படைகளுக்குமி டையே நடந்த கொடூரமான உள்நாட்டுப் போரில் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். பல லட்சம் பேர் போரில் சிக்கி உடல் ஊன முற்றனர். பின்னர், 2000-வது ஆண்டில் ஐ.நா. மன்றத்தின் பெயரால் ஏகாதிபத்தியங்களின் தலைமையி லான பன்னாட்டுப் படைகள் சியாரா லியோனில் குவிக்கப்பட்டு, இரு தரப் புக்குமிடையே சமரச பேரங்கள் நடத் தப்பட்டு, பெயரளவிலான அமை தியும் ஜனநாயகமும் நிலைநாட்டப்பட் டது.

பின்வாங்கிச் சென்று பட்டினியால் பரிதவித்த சாங்கோ படைவீரர்களை அணிதிரட்டிய லைபீரிய அதிபர் டெய்லர், அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு வடக்கேயுள்ள அண்டை நாடான கினியா மீது படையெடுத்தார். டெய்லரின் படைகள் கினியாவின் மூன்றிலொரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செலுத்தத் தொடங் கின. பின்னர் கினியா, அமெரிக்காவி டமிருந்து ஆயுத உதவி பெற்று, நைஜீ ரியா, ஐவரிகோஸ்ட் ஆகிய நாடுகளது உதவியுடன் டெய்லர் படைகளை விரட்டியடித்தது.




**அமெரிக்க ஆலோசனைப்படி பதவி விலகிய லைபீரிய சர்வாதிகார அதிபர் சார்லெஸ் டெய்லர்.**

லைபீரியாவின் அண்டை நாடான ஐவரிகோஸ்ட்டில், தென்பிராந்திய பழங்குடியின மக்களே நாட்டின் ஆட்சி யதிகாரத்தைக் கட்டுப்படுத்துபவர்க ளாக உள்ளனர். வட பகுதியிலுள்ள பழங்குடியின யுத்தப் பிரபுக்கள் தமக்கு கூடுதல் அதிகாரம் கோரி அரசுக்கு எதி ராகப் போர் தொடுக்கின்றனர். இக்க லகப் படையினருக்கு லைபீரியாவும் வடகிழக்கேயுள்ள பர்கினா பாசோவும் ஆதரவு தெரிவித்து உசுப்பி விடுகின் றன. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் தலையீட்டுக்குப் பிறகு, ஐவரி கோஸ்ட் அரச படைகளுக்கும் வடக்கத்திய யுத்தப் பிரபுக்களுக்குமிடையே, தற்கா லிக சமரசம் ஏற்பட்டுள்ள போதிலும், இன்னமும் லைபீரியாவை ஒட்டியுள்ள பகுதிகளில் போர் ஓயவில்லை.

ஐவரிகோஸ்ட் அரசுக்கு எதிராக லைபீரியா கலகங்களைத் தூண்டி விடு கிறது. மறுபுறம், லைபீரியாவிலிருந்து அகதிகளாக ஓடிவரும் மக்களுக்கு அடைக்கலமும் ஆயுத உதவியும் அளித்து லைபீரிய அதிபருக்கு எதி ராகப் போராடுமாறு ஐவரிகோஸ்ட் தூண்டி விடுகிறது. ஐவரிகோஸ்ட்டின் அரச எதிர்ப்பு படைகளுக்கு பர்கினா பாசோ ஆயுத உதவி அளிக்கிறது. சியாரா லியோனின் முன்னாள் யுத்தப் பிரபுவாகிய சாங்கோவின் கலைக்கப்பட்ட படையின ருக்கு ஆயுத உதவி அளித்து வரும் கினியா, அப்படையி னரை லைபீரிய அரசுப் படை களுக்கு எதிராக ஏவிவிடுகி றது. இவ்வாறாக மேற்கு ஆப்பிரிக்கப் பிராந்தியம் முழுவதும் கடந்த பத்தாண்டு களாக போர்களும் சூறையா டலும் கொலைகளும் தொடர் கின்றன.

கடந்த ஆறு மாதங்களாக லைபீரியாவில் உக்கிரமாக நடக்கும் உள்நாட்டுப் போரில், அதிபர் டெய்லரின் அரச படைகளுக்கு எதிராக, லைபீரிய ஜனநாயகத்துக் கான இயக்கம் (MODEL), லைபீரிய சமரசம் - ஜனநாய கத்துக்கான ஒற்றுமை இயக்கம் (LURD) ஆகிய வற்றின் படைகள் போரிடு கின்றன. இதில் முன்னதாக உள்ள கலகப் படைகளுக்கு ஐவரிகோஸ்ட் ஆதரவும் ஆயுத உதவியும் அளிக்கி றது. இரண்டாவதாக உள்ள படைக ளுக்கு கினியா ஆதரவளிக்கிறது.

அரச படைகளும் எதிர்த்தரப்பு படைகளும் பெருமளவில் இளைஞர்க ளையும் சிறுவர்களையும் சேர்த்துக் கொண்டு போரிடுகின்றன. முறையான போர் பயிற்சியில்லாத இந்த வேலை யற்ற இளைஞர்களும் சிறுவர்களும் கையிலே துப்பாக்கியுடன் கண்மூடித்த னமாகத் தாக்குதலை நடத்துகின்றனர். அரச படைகளானாலும் எதிர்த்தரப்பு படைகளானாலும், படை வீரர்கள் தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள வேண்டும் என்பது பொது விதியாக உள்ளது. இதனால் கேள்வி முறையற்ற சூறையாடலும் கொலை களும் பாலியல் வன்முறைகளும் தலைவிரித்தாடுகின்றன. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் லைபீரியாவில்

www.padippakam.com

3000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். ஏறத்தாழ ஐந்து லட்சம் மக்கள் வாழ்விழந்து அகதிகளாக அண்டை நாடுகளுக்கு ஓடுகின்றனர். ஆனால், அந்நாடுகளிலும் தொடரும் உள்நாட்டுப் போர்களால் மேற்கு ஆப்பிரிக்க மக்கள் தீராத அவலத்தில் உழல்கின்றனர்.

கடந்த ஜூலை மாதத்தில் அரசு எதிர்ப்புப் படைகள் லைபீரியாவின் வைரச் சுரங்கங்களையும் தெற்கேயுள்ள புகானன் துறைமுகத்தையும் கைப்பற்றிக் கொண்டு, தலைநகர் மன்ரோவியாவை முற்றுகையிட்டதும், உள்நாட்டுப் போர் உக்கிரமடைந்து கொலைகளும் சூறையாடலும் அராஜகமும் தலைவிரித்தாடின. ஆனாலும் உலகிற்கு நாகரீகத்தையும் ஜனநாயகத்தையும் போதிக்கும் ஏகாதிபத்திய உலகம், மேற்கு ஆப்பிரிக்காவை ஏறெடுத்தும் பார்க்காமல் அலட்சியப்படுத்தின. ஏனெனில், இன்றைய நிலையில் லைபீரியா பொருளாதார ரீதியாகவோ, போர்த்தந்திர ரீதியாகவோ ஏகாதிபத்தியவாதிகளுக்கு முக்கியத்துவமிக்க நாடு அல்ல. உள்நாட்டுப் போரில் கொல்லப்பட்டவர்களின் பிணங்களுடன் லைபீரிய மக்கள், ''அமெரிக்காவே, காப்பாற்று!'' என்று அமெரிக்க தூதரகத்தின் முன் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கதறிய போதிலும், அமெரிக்க கோமான்கள் அசைந்து கொடுக்கவில்லை.

பின்னர், இதர ஏகாதிபத்தியங்களின் நிர்பந்தம் காரணமாக, ஐ.நா. மன்ற ஏற்பாட்டின்படி, ஒரு தற்காலிக சமரசத் திட்டத்தை அமெரிக்கா அறிவித்தது. இதன்படி, லைபீரிய அதிபர் டெய்லர் பதவி விலகுவார்; அவருக்கு நைஜீரியா அடைக்கலம் அளிக்கும்; மேற்கு ஆப்பிரிக்காவில் இராணுவ ரீதியில் வலுவான நாடாக உள்ள நைஜீரியா தலைமையில் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் அமைதிப்படை நிறுவப்பட்டு, லைபீரியாவுக்கு அனுப்பப்படும்; அமெரிக்கா இந்த அமைதிப் படைக்கு உதவிகள் செய்யும்; விரைவில் ஐ.நா. மன்றத்தின் மூலம் பன்னாட்டு அமைதிப் படை லைபீரியாவுக்கு அனுப்பப்படும்.

அமெரிக்கா தனது படைகளை நேரடியாக லைபீரியாவுக்கு அனுப்பாமல், குறைந்த அளவு படைகளை மட்டும் உதவிக்கு அனுப்பி வைத்து, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளது படைகளைக் கொண்டே ஆதிக்கம் செய்ய முயற்சிக்கிறது. ஏனெனில், மேற்கு ஆப்பிரிக்க யுத்தப் பிரபுக்களின் - அராஜக



வறுமை - வேலையின்மையால் மேற்கு ஆப்பிரிக்கச் சிறுவர்கள் யுத்தப் பிரபுக்களின் கூலிப்படையாக்கப்பட்டுள்ள அவலம்: சாவு வியாபாரத்துக்கு வற்றாத ஊற்று.

கும்பல்களின் தாக்குதலில் தனது படைவீரர்களைப் பலிகொடுத்து அவமானப்பட அது தயாராக இல்லை. ஏற்கெனவே சியாரா லியோனில், யுத்தப் பிரபு சாங்கோ படையினர் பிரிட்டிஷ் அமைதிப் படை சிப்பாய்களைக் கொன்று, எட்டி உதைத்துச் சிறுநீர் கழித்து அவமானப்படுத்தியதை அது மறந்து விடவில்லை. அதற்கு முன்பு சோமாலியாவுக்குச் சென்ற அமெரிக்காவின் அமைதிப்படை உதைபட்டு பல படைவீரர்களைப் பலிகொடுத்ததையும் உணர்ந்து, எச்சரிக்கையுடன் பின்னாலிருந்து கொண்டு ஆதிக்கம் செய்யும் உத்தியை இப்போது லைபீரியாவில் மேற்கொள்கிறது.

அமெரிக்க ஏற்பாட்டின்படி லைபீரிய அதிபரான யுத்தப் பிரபு டெய்லர், இப்போது பதவி விலகி நைஜீரியாவில் அடைக்கலம் புகுந்துள்ளார். சியாரா லியோனில் நடந்த உள்நாட்டுப் போருக்குப் பிறகு ஐ.நா. ஆதரவுடன் அமைக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றம், லைபீரிய அதிபர் டெய்லரை மனித இனத்துக்கு எதிரான கொடிய குற்றவாளி என்று தீர்ப்பளித்திருந்தது. அக்குற்றவாளியை இத்தனை காலமும் ஆதரித்து வந்த அமெரிக்கா, இப்போது எந்த தண்டனையுமின்றி நைஜீரியாவில் அடைக்கலம் அளித்து பாதுகாக்கிறது. நாளை லைபீரியாவில் தமது ஆதிக்கத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், இத்தகைய யுத்தப் பிரபுக்களைக் கொண்டு தாக்குதல் நடத்தி பொம்மையாட்சியை நிறுவுவதே ஏகாதிபத்தியங்களின் திட்டமாக உள்ளது.

மேற்கு ஆப்பிரிக்காவின் சியாரா லியோனில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தலையீட்டுடன் பன்னாட்டுப் படைகளைக் கொண்டு அமைதி! ஐவரி கோஸ்டில் பிரெஞ்சு ஏகாதிபத்திய தலையீட்டுடன் அமைதி! இப்போது லைபீரியாவில் அமெரிக்கத் தலையீட்டுடன் அமைதி! பீற்றிக் கொள்ளப்படும் ஏகாதிபத்தியவாதிகளின் அமைதி - ஜனநாயகத்தின் யோக்கியதை இதுதான்.

ஆக, ஆப்பிரிக்க நாடுகளில் பகிரங்கமான பாசிச / இராணுவ சர்வாதிகார அரசுகள் நீடித்தாலும், புதிதாக பெயரளவிலான ஜனநாயக அரசுகள் வந்தாலும் ஆளப்போவது யார்? போலி சோசலிச - போலி ஜனநாயக வேடம் போடும் பழங்குடியின அரசர்கள், யுத்தப் பிரபுக்கள், இராணுவத் தளபதிகள்தான்! இவர்கள் அனைவருமே ஏதாவதொரு ஏகாதிபத்திய வல்லரசின் விசுவாச கைக்கூலிகளாகவே உள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் எதிராக ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் - பொருளாதார சுதந்திரத்தை நிறுவி, இயற்கை மூலவளங்களைப் பாதுகாத்து மக்களுடைமையாக்கி, சுயசார்பான தேசிய பொருளாதாரத்தைக் கட்டியமைக்க வேண்டும். நாட்டுப் பற்றும் ஜனநாயக உணர்வுமிக்க சக்திகள் பாட்டாளி வர்க்கத் தலைமையில் திரண்டு அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலமே இதைச் சாதிக்க முடியும். அப்போதுதான் இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்கா, ஒளியைக் காண முடியும்.

● பாலன்



படிப்பகம்

# பாமரர்களின் பக்தியே ஆர்.எஸ்.எஸ்.-இன் அடித்தளம்!

வேலூர் நகரக் கோட்டை கோவிலுக்குள் இருந்து ''லிங்கம்'' அகற்றப்பட்டதற்கு முசுலீம் படையெடுப்புதான் காரணமென்றும், அதை மீண்டும் அங்கு நிறுவுவதற்குத் தடையாக இருந்தவர்கள் யாரோ ''இந்து'' எதிர்ப்பாளர்கள்தாம் காரணமென்றும், அதையும் மீறி அங்கு லிங்கத்தை நிறுவும் தெய்வீகத் தொண்டை ஆர்.எஸ்.எஸ். காரர்கள்தாம் வீரதீரத்தோடு செய்து முடித்ததாகவும் இந்துவெறியர்கள் சரடுவிடுகிறார்கள்.

முதலாவதாக, வேலூரில் உள்ள கோட்டைகள் மற்றும் நகரக் கோட்டைக்குள் உள்ள கோவில் எப்போது, யாரால் கட்டப்பட்டது என்ற உண்மையை ஆர்.எஸ்.எஸ். காரர்கள் மூடி மறைக்கின்றனர். வேலூர் கோட்டைகளும் கோவிலும் இந்து ஆட்சியாளர்களால் கட்டப்படவில்லை. அப்படி ஒரு இந்து ஆட்சி அங்கு நிலவியதாக வரலாறும் இல்லை. அவை முசுலீம் ஆட்சியாளர்களால்தாம் கட்டப்பட்டன.

ஆங்கிலேயக் காலனியவாதிகளிடம் சரணடைந்து, ஆட்சி அதிகாரத்தை ஆற்காடு நவாபு அடகு வைத்த போது, விடுதலைப் போர் தொடுத்த மைசூரை ஆண்டுவந்த திப்பு சுல்தான் படை ஒருசமயம் வேலூர் கோட்டையைப் பிடித்தது. ஆனால், கோட்டைக்கோ கோவிலுக்கோ எவ்விதப் பாதிப்பும் ஏற்படுத்தவில்லை. மாறாக சீரமைத்துப் பராமரித்தது.

ஆற்காடு நவாப்போடு சேர்ந்து ஆங்கிலேயக் காலனியவாதிகளுக்கு அடிமை ஊழியம் செய்த பார்ப்பன - புரோகிதர்கள்தாம், ''மைசூரை ஆளும் முசுலீம் மன்னன் படையெடுத்து வருகிறான்; கோவில்களை இடிப்பான்; இந்துக் கடவுள் சிலைகளைத் தாக்கி உடைப்பார்கள்; இந்துக்களைக் கொன்று போடுவார்கள்; பெண்களைக் கற்பழிப்பார்கள்'' என்று புரளி கிளப்பி, கோட்டை கோவில் லிங்கத்தை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். ஆனால், ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தமது சிறு நூலில் கூறுவதைப் போன்று அந்தக் கோட்டை கோவில் இன்னமும் சிதிலமடையாமல் அழகாக இருக்கிறது என்றால், ''படையெடுத்து வந்த'' முஸ்லீம்கள் அதற்கு எந்தப் பாதிப்பையும் செய்யவில்லை என்பதுதானே பொருள். மேலும், அவர்களால் இந்துக்களுக்கு எந்தவிதத் தீங்கும் நடந்ததாக சிறு வரலாற்று ஆதாரமும் சம்பவமும் கிடையாது. அதற்கு மாறாக, பாழடைந்த பல ''இந்து''க் கோவில்களைப் புதுப்பிக்கவும் பூசைகள் நடத்தவும் திப்பு சுல்தான் உதவியதாகத்தான் சரித்திரம் கூறுகிறது.

வேலூர் கோட்டை கோவிலுக்குள் லிங்கத்தை நிறுவுவதற்கு ''இந்து எதிர்ப்பாளர்கள்'' யாரும் தடையாக நிற்கவில்லை. இந்திய அரசின் தொல்லியல் துறைதான் எதிர்த்தது. எந்தவொரு வரலாற்றுச் சின்னத்தையும் தொல்லியல் துறை தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ளும் போது, இருந்த நிலையில் மாற்றம் எதுவும் செய்வதைத் தொல்லியல் சட்டவிதி அனுமதிப்பதில்லை என்பதுதான் அதற்குக் காரணம். இந்த அடிப்படையில்தான் தஞ்சை பெரிய கோவிலைக் கட்டிய ராஜராஜ சோழன் சிலையை, அக்கோவில் வளாகத்திற்குள் நிறுவும் தி.மு.க. அரசின் முயற்சியைத் தொல்லியல் துறை ஏற்கவில்லை.

ஜெர்மனியில் மட்டுமல்லாது, தான் ஆக்கிரமித்த பலதேசக் கலைக் களஞ்சியங்களைச் சூறையாடிய இட்லர், தமிழக சட்டப் பேரவைப் பதிவேடுகளைத் திருத்திய ஜெயலலிதா, பாபரி மசூதியை இடித்த ஆர்.எஸ்.எஸ். 'இந்து'' மதவெறியர்கள் - இப்படி பாசிஸ்டுகள் அனைவருமே வரலாற்றுச் சின்னங்களை மாற்றியமைத்து, பாமர மக்களின் ஆதரவைத் தேடிக் கொள்ள எத்தணிக்கின்றனர். அதுபோன்றதொரு செய்கைதான் வேலூர் கோட்டை கோவிலுக்குள் லிங்கத்தை நிறுவிய செயல். இந்தச் சதிச் செயலையே பின்வருமாறு பீற்றிக் கொள்கிறார்கள்:

*''கோவிலுக்கு அருகில் உள்ள மைதானத்தில் ஒரு பெரிய யாகம் ஒழுங்கமைக்கப்பட்டது. அங்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் குழுமினர். முன்னரே தீர்மானிக்கப்பட்ட முகூர்த்த வேளையில், அனைவருக்கும் வியப்பூட்டும் வகையில், திட்டமிட்டவாறு, பாரம்பரிய வேத - ஆகம சடங்குகளோடு அங்கு எடுத்து வரப்பட்ட லிங்கம் நிறுவப்பட்டது. அதே சமயம் இந்த நிறுவுதல் பற்றி நகரிலும் கிராமங்களிலும் அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் மாபெரும் ஆர்வத்தோடு கோவிலுக்கு விரைந்தார்கள்; அதனால் லிங்கம் நிறுவப்படுவதை அரசாங்க இயந்திரத்தால் தடுக்க இயலவில்லை.*

*சுற்று வட்டாரங்களில் எல்லாம் சிவலிங்கம் நிறுவப்பட்டதை அறிவித்து, இரண்டு மாதங்கள், இரவும் பகலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தொடர்ச்சியாகத் திரட்டி வரப்பட்டுக் குவிக்கப்பட்டார்கள். இந்துக்கள் அடைந்த மகிழ்ச்சியும் ஆர்வமும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அந்த இரண்டு மாதங்களுக்கு 24 மணி நேரமும் மூன்றிலிருந்து நான்காயிரம் பக்தர்கள் வருவது வழக்கமானது. எதிரிகளும் அரசாங்கத் துறைகளும் அமைதியான பார்வையாளர்களாக மட்டுமே இருக்க முடிந்தது.*

*''அருள்மிகு காஞ்சி பரமாச்சார்யா பத்து நாட்கள் கோவிலில் முகாமிட்டார்கள். இப்போது அக்கோவில் தமிழ் நாட்டில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கோவிலாகிவிட்டது. முறையாக ஒரு பக்தர் கூட்டத்தை ஈர்க்குமளவுக்கு எல்லா அம்சங்களிலும் முழு வளர்ச்சி பெற்று விட்டது. சுயம் சேவக்குகளின் தோள்களில் சுமந்து வந்து அங்கு லிங்கம் நிறுவப்பட்ட செய்தியும் படங்களும் எல்லா பத்திரிகைகளிலும் வெளிவந்தன. லிங்கம் எவ்வாறு நிறுவப்பட்டது, எவ்வாறு ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி ஊழியர்களால் முழுவதும் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டது என்கிற முழு விவரங்களும் பத்திரிக்கைகளில் வந்தன. அப்போதிருந்த உள்ளூர் கலெக்டர், சங்க ஊழியர்களுடன் முழு ஒத்துழைப்புடன் வேலை செய்தார்''* (தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து எழுச்சியின் கதை, ஆர்.எஸ்.எஸ். வெளியீடு; பக்: 23)


படிப்பகம்

www.padippakam.com

காஞ்சி மடாதிபதி முதல் மாவட்ட ஆட்சியர் வரை ஆர்.எஸ்.எஸ். கும்பலோடு சேர்ந்து நிறைவேற்றியிருக்கும் இந்தச் செயலை ஏதோ கடும் எதிர்ப்புக் கிடையே புரிந்த சாதனையைப் போல இங்கே சித்தரிக்கிறார்கள். திட்டமிட்டு சுற்றுப்புறக் கிராமங்களில் இருந்து கும்பலைத் திரட்டி வந்தபோதும், ஏதோ மக்கள் தாமே திரண்டு வந்ததைப் போலவும் படம் பிடிக்கின்றனர்.

இதில் கவனிக்க வேண்டியவை என்னவென்றால், இல்லாத ஒரு பிரச்சினையை உருவாக்கி, ஊதிப் பெருக்கி, பரபரப்பை ஏற்படுத்துகிறார்கள். பாமர மக்களோ, தாம் எதற்காக, யாரால் திரட்டப்படுகிறோம் என்கிற சிந்தனையின்றி, குருட்டுத்தனமாக பக்திப் பிரச்சாரத்திற்கு பலியாகியுள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். கும்பல் நேரடியாகத் தமிழக மக்களிடம் போய், உண்மையைச் சொல்லி, தனது சொந்த அடையாளத்தோடு இயக்கம் கட்ட முடியாமல் திணறும்போது எப்படி நரித்தனமான வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்பதற்கு இன்னுமொரு சான்று, கன்னியாகுமரி முனையில் விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் நிறுவிய செயல். அதை அவர்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

1948-இல் இந்துமத வெறியன் கோட்சே காந்தியைச் சுட்டுக் கொன்றான். அதைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். இயக்கம் நாடு முழுவதும் தடை செய்யப்பட்டது. 1949-இல் அத்தடை நீக்கப்பட்டது. அதன்பின்,

*''சங்கப் பயிற்சிக் குழுக்கள் மீண்டும் பல இடங்களில் தொடங்கப் பட்டன; ஆனால், அவை விரிவடைய முடியவில்லை. பயிற்சிக் குழுக்கள் பரவவில்லை என்றாலும் சங்க சுயம் சேவக்குகள் பிற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்; அவை தேசிய நடவடிக்கைகளை முன்னேற்ற வைத்தன. அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று, நமது தாய்நாட்டின் தெற்கு முனைக்கு அப்பால் உள்ள கடலில் விவேகானந்தர் நினைவுப் பாறையை நிர்மாணித்தது. சுவாமி விவேகானந்தர் அலைந்து திரியும் ஒரு சன்னியாசி என்கிற முறையில் கன்னியாகுமரி கோவிலுக்கு வந்தார். பிரார்த்தனை செய்துவிட்டு கடலில் நீந்திப் போய் கோவிலுக்கு முன்பு, கடலுக்கு நடுவில் எழுந்து நிற்கும் ஒரு பெரும் பாறையில் அமர்ந்தார். 1892 டிசம்பர் 25,26,27 ஆகிய மூன்று நாட்கள் தியானம் செய்தார். இந்தப் பாறை விவேகானந்தர் பாறை என்று பெயரிடப்பட்டது. சுவாமிஜி பிறந்த நூற்றாண்டில் அதாவது 1963-இல் அந்தப் பாறையின் மீது அவருக்கு ஒரு நினைவகம் கட்டுவது என்னும் யோசனை ஆர்.எஸ்.எஸ்.இன் பிராந்திய பிரச்சாரகர் சிறீ தாதாஜி திதோல்கருக்குத் தோன்றியது. சங்கம் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டது; விவேகானந்தா பாறை நினைவகக் கமிட்டி என்று ஒரு தனி அமைப்பு அந்த ஆண்டு நிறுவப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன.''* (மேற்படி நூல்)

தமிழகத்தில் நிலவும் பார்ப்பன எதிர்ப்புணர்வு காரணமாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பு விரிவடைய முடியாத நிலை இருந்தது; இதை

**இந்து மதவெறியர்கள் இல்லாத ஒரு பிரச்சினையை உருவாக்கி, ஊதிப் பெருக்கி, பரபரப்பை ஏற்படுத்துகிறார்கள். பாமர மக்களோ, தாம் எதற்காக, யாரால் திரட்டப்படுகிறோம் என்கிற சிந்தனையின்றி, குருட்டுத்தனமாக பக்திப் பிரச்சாரத்திற்குப் பலியாகின்றனர்.**

மாற்றுவதற்காக அவர்கள் கண்டுபிடித்த தந்திரம்தான் இந்த விவேகானந்தர் பாறை நினைவகம். அதாவது, பார்ப்பனரல்லாத இந்து மதப் பிரச்சாரகர் விவேகானந்தர்; பார்ப்பனரல்லாதோரையும் உள்ளிழுக்கும் வகையில் பார்ப்பன சனாதன தர்மத்தைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டும் என்றும் பிரச்சாரம் செய்தவர். காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகள் கூடத் தமது மிதவாத இந்துத்துவாவை, விவேகானந்தரைத் தூக்கிப் பிடித்து முன்தள்ளுவது உண்டு. அப்படிப்பட்ட விவேகானந்தரை முன்னிறுத்தி, ஆர்.எஸ்.எஸ். காரர்கள் முதலில் ஆதரவு திரட்டுவதில் இறங்கினார்கள்.

மேலும், குமரி மாவட்டத்தில் இந்து நாடார்கள் பெரும்பான்மையாகவும், கிறித்தவ நாடார்கள் சிறுபான்மையினராகவும் உள்ள அதேசமயம், மீனவர்கள் அனைவரும் கிறித்தவர்களாக உள்ளனர். இந்து நாடார்களுக்கும் கிறித்தவ மீனவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டைக் கிளறிவிட்டு குளிர்காய முடியும் என்று ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கணக்குப் போட்டனர். வட மாநிலங்களில் இந்து - முசுலீம் முரண்பாட்டை உருவாக்கிப் பயன்படுத்துவதைப் போல இங்கு செய்ய முடியாது. இங்கு கிறித்தவ மதத்திற்கு மதம் மாறுவது சமீப நூற்றாண்டுகளில் தான் அதிகமாக நடந்துள்ளது. எனவே, தமிழகத்தில், குறிப்பாகத் தென் மாவட்டங்களில் கிறித்தவர்களுக்கு எதிரான இந்துமத வெறியைத் தூண்டி ஆதாயம் அடைவது எளிது என்பதுதான் அவர்களின் கணக்கு.

இந்தக் காரணங்களால் விவேகானந்தர் பாறை நினைவகம் கட்டுவதைக் கையிலெடுத்த ஆர்.எஸ்.எஸ். காரர்கள், அதற்கு முன்பு அந்தப் பாறை இருந்த நிலை பற்றிய உண்மையை மூடிமறைத்துள்ளனர். குமரி முனையை அங்குள்ள மீனவர்கள் மீன்பிடித் துறைமுகமாகப் பல நூறாண்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றனர். அங்கிருந்து வெகு அருகாமையில் உள்ள பாறையை மீன்பிடி வலைகளைக் காயவைக்கவும், கடலுக்குள் சென்று விட்டு வரும் மீனவர்கள் உணவருந்தி ஓய்வெடுக்கவும் பயன்படுத்தி வந்தனர். ஆண்டுக்கொருமுறை சிலுவை வைத்து ''குருந்தட்டி'' என்னும் வழிபாடு நடத்தி வந்தனர்.

இருந்தும் அந்தப் பாறையை அடாவடியாகக் கைப்பற்றி, விவேகானந்தர் பாறை நினைவகம் கட்டும் வேலையில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் இறங்கியது.

*''ஆர்.எஸ்.எஸ்.-இன் ஓய்வு பெற்ற பொதுச் செயலாளர் மானனீய ஏக்நாத்ஜி ராணடேயிடம் அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் பெரிதும் சிறிதுமாகப் பல பொதுக் கூட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. இந்தக் கூட்டங்களில் சுவாமி விவேகானந்தரின் இந்து தேசியக் கருத்துக்கள் (அவை கிட்டதட்ட சங்கத்தின் சித்தாந்தம் போன்றவை) பரப்பப்பட்டன. சென்னை கடற்கரையில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடந்தது; சுவாமி சின்மயானந்தாவோடு குருஜியும் அக்கூட்டத்தில் பேசினார். தமிழ்நாடு சட்ட மேலவைத் தலைவர் மா.பொ.சிவஞானம் அந்தப் பாறையில் ஒரு கல்வெட்டைத் திறந்து வைத்தார். அதில் 1892-இல் சுவாமிஜி அங்கு தியானம் செய்தார் என்று அறிவிப்பு இருந்தது. அது, உள்ளூர்*



படிப்பகம்

www.padippakam.com

கிறித்தவ சபையின் தூண்டுதலின் பேரில் உள்ளூர் கிறித்தவ மீனவர்களால் உடைத்து அழிக்கப்பட்டது; அதோடு அங்கு ஒரு சிலுவையும் நிறுவப்பட்டது. பல தடையீடுகள், பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, சுவாமிஜிக்கு ஒரு மாபெரும் நினைவகம் எழுப்புவதற்காக விவேகானந்தா பாறை நினைவகக் கமிட்டியிடம் அந்தப் பாறையை இறுதியாக அரசாங்கம் ஒப்படைத்தது. நாடு முழுவதும் உள்ள முழு சங்கமும் இந்த வேலையில் ஈடுபட்டு, மாபெரும் நினைவகம் எழுப்பப்பட்டது. அது இப்பொழுது ஒரு பெருமைக்குரிய, மதிப்புக்குரிய சுற்றுலா ஈர்ப்பு மையமாக மாறியுள்ளது.'' (மேற்படி நூல், பக். 9)


குமரி மீனவர்களிடமிருந்து தென்கோடியில் உள்ள அந்தப் பாறை பறிக்கப்பட்டது மட்டுமல்ல; கன்னியாகுமரியின் முக்கால் பகுதி நிலத்தை வெவ்வேறு பெயர்களில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இதற்குத் தமிழகத்தை ஆண்ட பக்தவச்சலமும் டெல்லியை ஆண்ட லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி போன்றவர்களும் நேரடியாகவும், காஞ்சி சங்கராச்சாரி மறைமுகமாகவும் துணை நின்றனர். கேரளாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ். குண்டர்களையும், தமிழக போலீசையும் வைத்து மீனவர்களை விரட்டி விட்டு இந்த ஆக்கிரமிப்புகளைச் செய்துள்ளனர்.

''இந்த நினைவகம் செப்.2, 1970-இல் புண்ணியாசனை செய்து வைக்கப்பட்டது. இது பிற்காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்து எழுச்சிக்கான விதைகளைத் தூவிய ஒரு முக்கியத் திட்டமாக அமைந்தது. ஏக்னாத் ராணடே தலைமையில் விவேகானந்தா கேந்திரம் பரிணமிப்பதற்கு விவேகானந்தா பாறை நினைவகம் நிறுவப்பட்டது அடித்தளமாக அமைந்தது. குறிப்பாக, தெற்கில் கிறித்தவ மதத்தின் விரிவாக்கம் மற்றும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்குக் கூட இந்தக் கேந்திரம் பங்களித்துள்ளது'' (மேற்படி நூல், பக். 4)

ஐந்து நட்சத்திர விடுதிக்குரிய எல்லா வசதிகளையும் கொண்ட இந்த விவேகானந்தா கேந்திரம், ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் உல்லாசமாகத் தங்கி ஓய்வெடுப்பதற்கும், மத வெறியைக் கிளப்புவதற்குச் சதித் திட்டங்கள் தீட்டுவதற்குமான மையமாக உள்ளது. அவர்களே குறிப்பிடுவதைப் போல தெற்கில் கிறித்தவ மதத்தினருக்கெதிரான கொலைவெறிக் கலவரங்கள் இங்கிருந்துதான் திட்டமிட்டு வழிகாட்டப்படுகின்றன.

விவேகானந்தர் பாறை நினைவகம் மற்றும் விவேகானந்தர் கேந்திரம் குமரியில் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து தெற்கில் அவர்கள் செய்த காரியம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்.

''ஏறக்குறைய இதே காலகட்டத்தில், திருநெல்வேலி மாவட்டம் - இடிந்தக்கரை என்ற ஒரு கடற்கரை கிராமத்தில் முதலாவதும் ஒரு மிகப் பெரியதுமான நிகழ்ச்சியை விசுவ இந்து பரிசத் ஏற்பாடு செய்தது; அங்கே சுமார் நானூறு கிறித்தவக் குடும்பங்கள் இந்து முகாமுக்குத் திரும்பினார்கள்; இந்துக்களுக்கென்று ஒரு கோவில் கட்டப்பட்டது. இந்துக் குரல் மிகவும் மெலிதானதாக உள்ள இந்த மாநிலத்தில் மதம் மாறியவர்கள் இந்துக் குடும்பத்துக்குத் திரும்பியது, இந்து தேசியத்தின் எழுச்சிக்காகக் காத்திருந்தவர்களுக்கு ஒரு மாபெரும் உத்வேகமாக வந்தது.'' (மேற்படி நூல், பக். 10)



ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் உல்லாசமாகத் தங்கி ஓய்வெடுப்பதற்கும், மதவெறியைக் கிளப்புவதற்குச் சதித் திட்டங்கள் தீட்டுவதற்குமான மையமாக உள்ள விவேகானந்தர் பாறை நினைவகம்.

தென் மாவட்டத்தில் கிறித்தவ மீனவர்களைக் குறி வைத்துச் சதித்தனமாகத் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். இயக்கம் விரைவிலேயே அதன் சுய உருவத்தைக் காட்டிவிட்டது. மத மாற்றத்தை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டே, தாமே மதமாற்றத்தில் ஈடுபட்டனர். ஆனால், தாம் செய்வது ''வீடு திரும்புதல்'' என்று கூறி நியாயப் படுத்திக் கொண்டனர். அதேசமயம் ''இந்து மதத்தில் இருந்து வெளியேறி'' மாற்று மதங்களுக்கு ''மதம் மாறுவது'' பொருளுதவி செய்தும், ஆசை காட்டியும் இழுப்பதாகும் என்று புளுகுகின்றனர். உண்மையில் ஆதிக்க சாதிகளின் வெறிச் செயல்கள் - ஒடுக்குமுறைகள் காரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது நடக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1980-களின் தொடக்கத்தில் ஒரு இலட்சம் ''அரிஜனங்கள்'' ஒரு இசுலாமிய அமைப்பின் தூண்டுதலால் மதம் மாறத் திட்டமிட்டிருந்ததாகவும், ஆர்.எஸ்.எஸ். காரர்களின் தலையீட்டால் தடுத்து நிறுத்திவிட்டதாகவும் பீற்றிக் கொள்கிறார்கள்.

''சன்னியாசிகள், மடாதிபதிகள் மற்றும் சாதித் தலைவர்கள் பங்கேற்புடன் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு ஒரு பாத யாத்திரை நடந்தது. செயலூக்கமிக்க இந்துத் தொண்டர்கள் சாதிப் பகைமைகளை அமைதிப்படுத்தினர். உண்மையில் மக்கள் வெகுளித்தனமாக உள்ளனர். அரசியல் தலைவர்கள் அவர்களைக் கேடாகப் பயன்படுத்துகிறார்கள், சுயநலனுக்காகப் பிளவுகளை ஏற்படுத்துகிறார்கள்.

''தேர்தல்கள் நெருங்கினால் அனைத்துச் சாதிகளுடைய ஒற்றுமையும் அமைதியான சூழலும் சுயநல அரசியல் கட்சிகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. சில அரிஜன இளைஞர்களைக் கூலிக்கு அமர்த்தி அபாயகரமான ஆயுதங்களைக் கொண்டு இராமநாதபுரத்தில் உள்ள ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதியின் மீது தாக்குதல் நடத்தவும் செய்தனர். 37 மாணவர்கள்


படிப்பகம்

www.padippakam.com

# “போராடாமல் வாழ்வில்லை!”

விருத்தாசலம் விளாங்காட்டூர் ஊராட்சியைச் சேர்ந்த விளாங்காட்டூர் - படுகளாநத்தம் கிராமங்களில் சுமார் 3000 மக்கள் வசிக்கிறார்கள். இவ்வளவு மக்களுக்கும் ஓரிரண்டு கை பம்புகளைத் தவிர, தண்ணீர் தேவைக்கு மாற்று வழியே கிடையாது. இருக்கும் இரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு, ஆழ்குழாய் போட்டு நீரேற்றாமல் அதிகாரிகள் அவற்றை காட்சி பொருட்களாகவே வைத்துள்ளனர்.



இந்நிலையில், பு.மா.இ.மு., வி.வி.மு. அமைப்புகளின் சார்பாக, பல வழிகளில் பலமுறை குடிநீருக்கு முயற்சித்தும் அதிகாரிகள் அசைந்து கொடுக்கவில்லை. எனவே, கடந்த 9.7.03 அன்று போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அருகாமையிலிருக்கும் “ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கொண்டு செல்லப்படும் நீரிலிருந்து விளாங்காட்டூருக்கு - குழாய் இணைப்பு விழா” என்று போராட்டம் அறிவிக்கப்பட்டது. வீடுவீடாகச் சென்று மக்கள் அணிதிரட்டப்பட்டனர். மேலும், “மக்கள் பங்கு குழாய் பதிக்க குழிவெட்டுவது, அதிகாரிகள் பங்கு குழாய் தருவது, ஆலையின் பங்கு இணைப்பு தருவது” என்று போராட்டத்தைப் பற்றித் தட்டியும் வைக்கப்பட்டது.

ஆலை நிர்வாகத்திற்கு மூக்கு வேர்த்தது. போலீசு துணை கண்காணிப்பாளர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். போராட்டத்தில் 400-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டனர். குடிநீர் வழங்க மறுக்கும் அதிகாரிகள் மற்றும் அரசினைக் கண்டித்து மக்கள் முழக்கங்களை எழுப்பினர்.

போராடிய மக்கள் மீது எந்த முன்னறிவிப்பும் இன்றி போலீசு தடியடி நடத்தியது. 14 பெண்கள் உட்பட 50-க்கும் மேற்பட்ட தோழர்களை போலீசு கைது செய்தது. பிணையில் வர இயலாத பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தது. 6 நாட்களுக்குப் பிறகு போராட்டக்காரர்கள் சிறையிலிருந்து மீண்டனர். இவர்களுடன், பொது மக்களும் தோழர்களும் பேரணியாக வர, பறையடித்தும் வெடி வெடித்தும் ஊருக்குள் உற்சாகமாக வர வேற்கப்பட்டனர். சிறையிலிருந்து வந்த பெண்கள் அப்போது “நாம எதுவும் செய்யாதபோதே போலீசு இப்படி சிறையிலடைக்கிறதே இனிமேல் ஏதாவது செஞ்சு, போராடி - சிறைக்குப் போக வேண்டும்” என்று ஆவேசத்துடன் பேசினர்.

சிறை சென்றது பற்றி சிறிதும் கவலைப்படாமல் பொதுமக்கள் அடுத்த கட்ட போராட்டத்திற்கு தயாரானார்கள். இதை அறிந்த ஊராட்சி மன்றத் தலைவர் அதிகாரிகளுடன் ஆலோசித்தார். “மக்கள் பங்கேற்புடன் குடிநீர் திட்டம்” என்று ஆழ்குழாய்கள் போடும் வேலை வேகமாக நடக்கிறது. மொத்த செலவில், மக்கள் பங்கு 10 சதவிகிதம் என்று இணைப்பு தயாராகி விட்டது.

தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்று நம் போராட்ட முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள்.

*தகவல்: வி.வி.மு., விளாங்காட்டூர்.*

காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இது, கிராமங்களில் அரிஜனங்களுக்கும் பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கும் இடையே சண்டையைத் தூண்டும் என்று அரசியல்வாதிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால், இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குப் பின்னரும் எதுவும் நடக்கவில்லை. பட்டப்பகலில், சந்தையில் வைத்து ஒரு அரிஜன இளைஞரை அடித்து, மீண்டும் ஒரு முயற்சி நடந்தது. இதுவும் கூட எந்தவொரு எதிர்வினையும் ஏற்படுத்தாதது அரசியல் தலைவர்களுக்கு ஏமாற்றமளித்தது. சங்கத் தொண்டர்கள் கிராமங்களைச் சுற்றி வந்து, இந்தச் சதித்திட்டங்களுக்குப் பலியாக வேண்டாம் என்று கிராம சாதித் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.” (மேற்படி நூல், பக். 18-19)

இது, ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் வாடிக்கையான பித்தலாட்டம் தவிர வேறொன்றுமில்லை. மத மாற்றத்துக்கு அடிப்படையான காரணம் இந்து சனாதன வருணாசிரம அமைப்பிலுள்ள சாதிய ஒடுக்குமுறைதான். அதை மூடிமறைத்து தாழ்த்தப்பட்ட மக்கள் விலை போவதும், மாற்று மதத்தினர் விலை கொடுத்து மதம் மாற்றுவதாகவும் பித்தலாட்டம் செய்கிறார்கள். அடுத்து, எல்லா அரசியல் கட்சிகளையும் தலைவர்களையும் குறை கூறுவது போல நாடகமாடுவது என்பது ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நீண்டகாலமாகப் பின்பற்றும் ஒரு தந்திரம். படித்தும் பாமரர்களாக உள்ள நடுத்தர வர்க்கத்தினர் உட்பட அரசியலற்ற பிழைப்புவாதிகளை ஈர்ப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளும் உத்தி.

வெவ்வேறு சாதிகளையும் சேர்ந்த அரசியல் தலைவர்கள் சாதித் தகராறுகள் என்று வந்தால் தமது சாதிகளின் பின்னே அணிதிரளுவது என்பது ஆதிக்கச் சாதிகளுக்குத்தான் பொருந்தும். கடந்த பத்தாண்டுகளாகத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி அடிப்படையில் கட்சிகள் வைத்துக் கொள்வது, குறிப்பாகத் தென் தமிழ் நாட்டில் தொடங்கியது. அதற்கு முன்பு தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் எல்லோரும் தமது கட்சிக்குதான் விசுவாசமாக இருந்தார்கள். ஆதிக்கச் சாதி அரசியல்வாதிகள்தாம் சாதி அரசியல் நடத்தினார்கள். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்கினார்கள். இவர்கள்தாம் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவதை எதிர்த்தார்கள். சாதி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறத் தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறுவதை விலை போவதாகக் கூறும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், அவதூறு செய்து உண்மையில் ஆதிக்கச் சாதி அரசியல்வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டார்கள்.

ஆனால், இந்தச் சாதி - மத ஆதிக்கச் சக்திகள் கூட்டுச் சேர்ந்து எவ்வளவுதான் முயன்றபோதும் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவதைத் தடுக்க முடியவில்லை. 1982-இல் மீனாட்சிபுரத்தில் 600-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கூண்டோடு மதம் மாறியது அவர்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

(தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

● கட்டாய நன்கொடைக்குத் தடை! ● பெற்றோர்-ஆசிரியர் கழகம் கலைப்பு!

# கல்வி அதிகாரிகளைப் பணிய வைத்த வி.வி.மு.வின் போராட்டம்




பெற்றோர் - ஆசிரியர் கழகம் என்ற பெயரிலான ஒரு அமைப்பை உருவாக்கி பள்ளிகளைத் தனியார்மயமாக்கும் செயலை தமிழக அரசு மறைமுகமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் பெயரில் கட்டாய நன்கொடை பெறுவது தமிழகம் முழுவதும் பரவலாக நடைபெற்று வருகிறது. புதிய ஆசிரியர் நியமனத்தையும் பள்ளிகளுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதையும் அரசு கை கழுவி விட்டது. அரசின் கடமையை வலியுறுத்திப் போராடத் தெரியாததால், கட்டாய நன்கொடை என்பது பள்ளிகள் தனியார்மயமாவதின் சதித் திட்டம் என்பது புரியாததால், வேறு வழியின்றி உழைக்கும் மக்கள் இதற்குப் பணிகின்றனர். பலர் பள்ளிகளுக்கு தங்கள் குழந்தைகளை அனுப்புவதை நிறுத்தி வருகின்றனர். ''காசில்லாதவனுக்குக் கல்வி இல்லை!'' என்ற பேயாட்சி கோர தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது.

இந்த புதிய மனுதர்மத்தை எதிர்த்தும், தேன்கனிக் கோட்டை வட்டம் நாட்றாம்பாளையம் கிராம பள்ளியில் அதிகரித்து விட்ட கட்டாய நன்கொடையை எதிர்த்தும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் பெயரை ''**தனியார் பள்ளி**'' என பெயர் சூட்டும் போராட்டம் வி.வி.மு. வினால் மேற்கொள்ளப்பட்டது.

இப்பள்ளியில் செயல்படும் பெற்றோர் - ஆசிரியர் கழகம் சென்ற ஆண்டுவரை ரூ. 100/- என கட்டாய நன்கொடை வாங்கி வந்தனர். இப்பள்ளியில் ஆசிரியர்கள் இல்லை, கூடுதல் ஆசிரியர்கள் தேவை எனக்கூறி இவ்வசூல் வேட்டை நடைபெற்றது. அப்பொழுதே முறையாக பணம் கட்டாத மாணவர்கள் வகுப்பு நேரங்களில் வீட்டிற்கு அனுப்பப்பட்டு பணம் வாங்கி வருமாறு நிர்ப்பந்திக்கப் பட்டனர்.

இவ்வாண்டு தொடக்கம் முதல் மற்றொரு பிரச்சினையும் தலைதூக்கியது. ''தொடக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்படுகிறது. புதிய கட்டிடம் தேவை. இதற்கு நிலத்தை நாம் வாங்கிக் கொடுத்தால் அரசாங்கத்தில் கட்டிடம் கட்டித் தருவார்கள்'' என்று பெ.ஆ. கழகம் கிராம மக்களிடம் வீட்டிற்கு ரூ. 500/- என அடுத்த வசூல் வேட்டையைத் தொடங்கியது. மேலும் நடுநிலைப்பள்ளியாக உயர்த்த அரசு அனுமதி தந்தாலும் அதற்கேற்ப கூடுதல் ஆசிரியர்களை நியமிக்கவில்லை. அந்த வகையில் கட்டாய நன்கொடை என்று படிக்கும் ஒவ்வொரு மாணவனிடமும் ரூ. 150/- உயர்த்தப்பட்டது. இதனால் ஒரு சில குழந்தைகள் நேரடியாகவே படிப்பை நிறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் புதிய கட்டிடம் பக்தி கவுண்டனூர் என்ற பக்கத்து கிராமத்திற்கு போகாமல் இருக்க வேண்டுமெனில் எல்லோரும் வேகமாக பணம் கொடுக்க வேண்டும் என்று நிர்பந்திக் கப்பட்டனர்.

இப்பகற்கொள்ளையை எதிர்த்து ஜூலை மாதம் தொடக்கம் முதல் வி.வி.மு. தோழர்கள் சார்பில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு பதில் கூற இயலாத பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பிரச்சினையைத் திசை திருப்ப எல்லா வகை முயற்சிகளையும் மேற்கொண்டனர். 'நக்சலைட்டுகள் கலவரம்' செய்யப் போவதாக புலனாய்வுத் துறை வரை தகவல் கொடுத்து போலீசாரைக் குவித்தனர்.

இந்நிலையில் ''தனியார் பள்ளி'' என்று பெயர் சூட்டும் இப்போராட்டம் ஆக.10 அன்று நடத்தப்பட்டது. ''நக்சல்பாரிகள் தேசபக்தர்கள்'' என்ற பதாகையைத் தாங்கி நட்றாபாளையம் கிராமத்தில் தோழர்கள் ஊர்வலமாக வந்தனர். தோழர்கள் இருவர் இப்போராட்டத்தின் தேவையை விளக்கி உரையாற்றினர்.

இதன் பிறகு தோழர்கள் அனைவரும் சென்று நடுநிலைப் பள்ளியில் **''காசில்லாதவனுக்குக் கல்வி இல்லை'' ''தனியார் பள்ளி''** என்ற தட்டியை மாட்டினர்.

இப்போராட்டம் நடந்து முடிந்த இரு நாட்கள் கழித்து கல்வி துணை அலுவலர் மற்றும் பிற அதிகாரிகள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் மற்றும் சில உள்ளூர் மக்கள் ஒரு அவசரக் கூட்டத்தைக் கூட்டினர். இக்கூட்டத்திற்கு வி.வி.மு. தோழர் முனியப்பனை அழைத்துப் பேசினர். இறுதியில் இப்போராட்டத்தின் நியாயத்தை ஏற்ற கல்வி துணை அலுவலர் ''கட்டாய நன்கொடை வசூலிக்கப்படாது, பெற்றோர் ஆசிரியர் கழகம் கலைக்கப் பட்டது!'' என்று எல்லோர் முன்பும் அறிவித்தார். இந்த வாக்குறுதிகளை ஏற்று தற்காலிகமாக ''தனியார் பள்ளி'' என்ற தட்டி நீக்கப்பட்டது.

அதே வேளையில் பள்ளியில் புதிய ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும் அல்லது தற்போது பணிபுரியும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினரால் நியமிக்கப்பட்டவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற அரசின் கடமையை வலியுறுத்தி அடுத்தகட்ட போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்டி வருகிறது வி.வி.மு.

இப்போராட்டத்தின் விளைவால் நாட்றாபாளையத்திற்கு அருகில் உள்ள பிற பஞ்சாயத்துக்களில் உள்ள பள்ளிகளிலும் கட்டாய நன்கொடைக்கு எதிராக போர்க்குரல் எழுந்துள்ளது. அந்த வகையில் கிராம மக்களிடையே உரிமைக்கான விழிப்புணர்வு பற்றிப் படரத் தொடங்கியுள்ளது!

**தகவல்: வி.வி.மு.,**
**நாட்றாம்பாளையம்,**
**தருமபுரி மாவட்டம்**


படிப்பகம்




வேலை நிறுத்த உரிமை பறிப்பு:
எஸ்மா, டெஸ்மா மற்றும் நீதிமன்ற பாசிசத்தை முறியடிப்போம்!

# பு.ஜ.தொ.மு.வின் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்

'வேலை நிறுத்தம் செய்ய அரசு ஊழியர்களுக்கு உரிமை கிடையாது' என்று அறிவித்துள்ளது உச்ச நீதிமன்றம். இன்றைய உலகமய சூழலில், உலக வங்கியின் கட்டளைக்கேற்ப தொழிலாளர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் உச்ச நீதிமன்றத்தின் இம்முடிவை அம்பலப்படுத்தி விளக்கும் விதமாக புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகஸ்டு 26-ஆம் தேதி மாலை சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பு.ஜ.தொ.மு. தலைவர் தோழர். அ.முகுந்தன் தலைமையேற்க, ஏ.ஐ.டி.யு.சி.யின் சென்னை மாவட்டச் செயலர் தோழர் டி.ஆர்.எஸ். மணி, ஏ.ஐ.சி.சி.டி.யு.வின் மாநில இணைச் செயலர் தோழர் ஏ.எஸ்.குமார், என்.எப்.டி.இ.இன் சென்னை மாவட்ட செயலர் தோழர் இளங்கோ சுப்பிரமணியம், ராயல் என்ஃபீல்டு தொழிலாளர் சங்கத்தின் இணைச் செயலர் தோழர் ஆதி தமிழன், சென்னை பாரத் எலக்ட்ரானிக்ஸ் தொழிலாளர் சங்க பொதுச் செயலர் தோழர் கருணாகரன், பு.மா.இ.மு. தோழர் கணேசன், ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன், பு.ஜ.தொ.மு. மாநில இணைச் செயலர் தோழர் லோகநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

இட்லர், முசோலினி போன்றவர்களின் ஆட்சியில் இருந்ததைப் போல் நீதிமன்றமும் பாசிசக் கொள்கைகளைக் கடைபிடித்து வருகிறது என்று விளக்கியும், ''பாசிச ஜெயாவை ஜெயிக்க முடியாதா?'' என்ற வெளியீட்டை அனைத்து அரசு ஊழியர்களும், தொழிலாளர்களும் படிக்க வேண்டுமென்று அறிமுகம் செய்தும், 'இடதுசாரி' தொழிற்சங்கங்கள் பலவும் செயலிழந்து போயுள்ள நிலையில், நீதிமன்ற பாசிசத்தை அம்பலப்படுத்தும் பு.ஜ.தொ.மு.வின் தொடர் பிரச்சாரம், போராட்டம் பாராட்டத்தக்கவை என்றும், பல்வேறு தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து போராடினால் ஒழிய உரிமைகள் எதையும் மீட்க முடியாது என்றும் உரையாற்றிய தோழர்கள் விளக்கினர்.

ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு தொழிற்சங்க அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். கேலிச் சித்திரங்கள், முழக்க அட்டைகள், செங்கொடிகளுடன் தோழர்கள் எழுச்சியுடன் முழக்கமிட்டனர். வர்க்கக் கோபத்தோடு நடந்த இந்த ஆர்ப்பாட்டம், தொழிலாளர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் போராட்ட உணர்வை விதைப்பதாக அமைந்தது.

*தகவல்: பு.ஜ.தொ.மு., சென்னை.*

# பொய் வழக்கை முறியடித்த பு.மா.இ.மு.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்தும், ஆர்.எஸ்.எஸ். இந்து மத வெறியர்களை அம்பலப்படுத்தியும் 6.12.2002 அன்று காலை 6 மணியளவில் திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையத்தில் பு.மா.இ.மு.வைச் சேர்ந்த தோழர்கள் குமாரும், செந்திலும் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த பொழுது அப்பகுதி போலீசார் அவர்களைக் கைது செய்தனர்.

போலீசு நிலைய வாசலிலேயே கையில் தடியுடன் நின்ற ஆய்வாளர் ஜெயராமன், ''ஏண்டா துலுக்கப் பயலுகளா, இந்தியாவுல ஏண்டா இருக்கீங்க! பாகிஸ்தானுக்கு ஓடுங்கடா'' என்று கத்திக் கொண்டே அத்தோழர்களைத் தாக்கினார். ''நாங்கள் கம்யூனிஸ்டுகள், எங்களுக்கு சாதி, மதம் கிடையாது'' என்று தோழர்கள் வாதாடியதையும் பொருட்படுத்தாமல், அவ்விரண்டு தோழர்களையும் நிர்வாணப் படுத்தி சுன்னத் செய்யப்பட்டுள்ளதா என்று சோதித்து தன் வக்கிர புத்தியை வெளிப்படுத்தினார்.

பின்னர், அத்தோழர்கள் மீது திருத்துறைப்பூண்டி போலீசு 75-வது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்தது. இக்கைது, தாக்குதல் பற்றி விவரமறிந்து, மற்ற தோழர்கள் போலீசு நிலையம் வந்ததும், மறுநாள் நீதிமன்றத்தில் அபராதத் தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையில் தனிநபர் ஜாமீன் வழங்கியது, போலீசு.

மறுநாள் திருத்துறைப்பூண்டி நீதிமன்றத்திற்கு வந்த தோழர்கள் நீதிபதியிடம், 'நாங்கள் குற்றம் எதையும் செய்யவில்லை. எங்களால் அபராதம் எதுவும் கட்டமுடியாது. நாங்கள் வழக்கை நடத்துகிறோம்' என்று அழுத்தமாகவும் ஆவேசமாகவும் கூறினர். வழக்குரைஞர்கள், போலீசு உட்பட அனைவரும் தோழர்களின் உறுதியைக் கண்டு வியந்து நின்றனர்.

மேற்கண்ட வழக்கு கடந்த எட்டு மாதங்களாக நடைபெற்றது. ஆகஸ்டு ஏழாம் தேதி, நீதிமன்றம் தோழர்களைக் குற்றமற்றவர்கள் என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தது. ஆர்.எஸ்.எஸ்.இன் அடியாளாக செயல்பட்டு வரும் போலீசை அம்பலப்படுத்த இவ்வழக்கு தோழர்களுக்கு இன்னொரு வாய்ப்பை வழங்கியது.

*தகவல்:*
*பு.ஜ. செய்தியாளர்கள்,*
*திருவாரூர் - நாகை மாவட்டம்.*

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மாலை 6 மணிக்கு தொடங்க வேண்டிய பொதுக்கூட்டம் விடாது பெய்த மழையின் காரணமாக 7.30 மணிக்குதான் தொடங்கியது. தொடர்ந்து மழை பெய்தபோதும் மூன்றரை மணி நேரம் நடந்த பொதுக்கூட்டத்தை உழைக்கும் மக்கள் நின்று பார்த்தோடு, தங்கள் ஆதரவையும் தெரிவித்தனர்.

**சீர்காழி** பழைய பேருந்து நிலைய மருகே கடந்த 3-ஆம் தேதி விளக்கப் பொதுக்கூட்டமும், ம.க.இ.க.வின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. வி.வி.மு. தோழர் இரவி தலைமையில், தோழர் காளியப்பன், பு.மா.இ.மு. தோழர் ஸ்டாலின், வி.வி.மு. தோழர் அம்பிகாபதி ஆகியோர் உரையாற்றினர். இதுவரை புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரத்தைக் கண்டு ஒதுங்கி நின்றவர்கள் கூட இன்று இந்த அமைப்புகள்தான் சரியாகவும் துணிவாகவும் செயல்படுகின்றன என்று பாராட்டினர்.

**சேலம் தாதகாபட்டியில்** கடந்த 10-ஆம் தேதி பு.ஜ.தொ.மு. தோழர் பழனிச்சாமி தலைமையில் அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்கத் தோழர் சேகர் மற்றும் வி.வி.மு. தோழர் ஆண்டியப்பன் ஆகியோர் உரையாற்ற விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் இறுதியில் ம.க.இ.க. கலைக்குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி கூடி நின்ற திரளான மக்களிடையே எழுச்சியை விதைத்தது.

**கோத்தகிரி** பகத்சிங் திடலில் கடந்த 17-ஆம் தேதி நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் பாலா தலைமை தாங்க, தோழர் நியூட்டன் மற்றும் தோழர் சிவகாமு ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் நடைபெற்ற மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி கூடிநின்ற மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பும் விதத்தில் அமைந்தது. சுமார் 1500-க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள் திரண்டிருந்து இறுதிவரை தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

**வேதாரண்யம்** பகுதியில் கடந்த ஜூலை முதல் தேதியன்று தமிழக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நடத்திய வேலைநிறுத்தத்தை ஒடுக்குவதற்காக புதிதாக அரசு பணிக்கு ஆட்கள் நியமிக்கப்படுவதாக அரசு அறிவித்ததை எதிர்த்து ம.க.இ.க., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் சுவரொட்டி இயக்கத்தை மேற்கொண்டன.

''அரசு பணிக்கு ஆட்கள் தேவை! நாள்: ஜூலை 7 சம்பளம் - மாதம் ரூ. 4000/-. தகுதி: துரோகத்தனம், அடிமைப்புத்தி, கருங்காலித்தனம். தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்'' என்று எழுதப்பட்ட சுவரொட்டிகள் நகர் முழுவதும் அரசு ஊழியர்கள் - உழைக்கும் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

# தேவ ஊழியமா? ஜெயா ஊழியமா?

இந்தச் செய்தியைப் படிப்போர்க்கு அதை நம்புவது மிகவும் கடினமாக இருக்கும். ஆயினும் பலர் முன்னிலையில் நடந்த சம்பவத்தைத்தான் கீழே விவரிக்கிறேன்.

கடந்த 2.8.03 அன்று தஞ்சையில் ம.க.இ.க., பு.மா.இ.மு. சார்பில் 'அரசு ஊழியர் போராட்டம் தோல்வியா?' என்ற தலைப்பில் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இக்கூட்டத்தை தஞ்சை பூக்கார கல்லுக்குளம் பகுதியில் உள்ள மக்கள் மன்றத்தில் நடத்த ஏற்பாடு செய்து நகர் முழுவதும் விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் அரங்கத்தில் கூட்டம் நடத்த அனுமதிக்க முடியாது என பங்குத்தந்தை தேவநேசம் மறுத்துவிட்டார்.

எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்ட நிலையில் இவ்வாறு மறுப்பது ஏன் என்பதை அறிய பங்குத்தந்தை தேவநேசத்தை நேரில் சந்திக்க தோழர் காளியப்பன், தோழர் இராவணன், தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவர் ஆகிய மூவரும் சென்றனர். அப்போதுதான் பாதிரியார் தேவநேசம் பூசையை முடித்துவிட்டு தனது அறைக்கு வந்தார்.

மூவரும் உள்ளே சென்று ''ஏன் அனுமதி மறுக்கிறீர்கள்? பணம் கட்டுவதற்கு முன்னால் அல்லவா மறுத்திருக்க வேண்டும்? கடைசி நேரத்தில் மறுப்பது என்ன நியாயம்? இதனால் ஏற்படும் இழப்புகளுக்கு யார் பொறுப்பு?'' என்று தோழர்கள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, பாதிரியார் தேவநேசம் தனது இருக்கையை விட்டு எழுந்து ''மன்னித்து விடுங்கள். தெரியாமல் கொடுத்து விட்டோம். இது அரசுக்கு எதிரான கூட்டம். அதனால் தர முடியாது'' என்றார்.

''அய்யா, இதே அரங்கில் மத மாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்து நடத்திய கூட்டத்திற்கு அனுமதி கொடுத்தீர்களே!'' எனக் கேட்டபோது அது வேறு, இது வேறு என்று சொன்னவர் திடீரென்று யாரும் எதிர்பாராத வகையில் நெடுஞ்சாண் கிடையாக தோழர்களின் காலில் விழுந்து 'மன்னித்து விடுங்கள்', என்று தோழர்களின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சுமார் 5 நிமிடம் விட்டு விடுங்கள் என்று அலறிக் கொண்டே இருந்தார்.

இந்த அலறல் சத்தம் கேட்டு சர்ச் ஊழியர்கள் சிலரும், இளம் பாதிரியார் ஒருவரும் வந்துவிட்டனர். நிலைமை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு சிக்கலாகிவிடும் என்பதால் பாதிரியார் தேவநேசத்தைத் தூக்கி நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு தோழர்கள் வெளியே வந்து விட்டனர்.

சம்பவத்தின்போது உடன் இருந்த இளம் பாதிரியார், தேவநேசத்தை உள்ளே வைத்துத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு தோழர்களிடம் சமாதானமாகப் போகுமாறு வேண்டினார். அறைக்கு உள்ளிருந்த பாதிரியார் தேவநேசமோ 'நம்ப முதலமைச்சரை எதிர்த்துக் கூட்டம் போடுறாங்க, எப்படி கொடுக்க முடியும்? நாளைக்கு இவங்க கோயிலுக்கே குண்டு வச்சிடுவாங்க' என்று பலமாகக் கத்தினார். அந்த இளம் பாதிரியார் தோழர்களிடம் ''சிறுபான்மையினராகிய நாங்கள் ம.க.இ.க.வுக்குப் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். ஆனால் பெரிய சாமியார் உங்களைப் பற்றித் தெரியாமல் பேசுகிறார். தயவு செய்து இத்துடன் விட்டு விடுங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார்.

பாதிரியார் தேவநேசத்தின் செயல் சுயமரியாதையுள்ள எந்த மனிதனும் நினைத்துப் பார்க்க முடியாத ஈனச் செயல். இவர் சொந்த லாபத்திற்கு எதையும் இழக்கத் தயாராயுள்ள ஒரு இழி பிறவி.

தேவ ஊழியம் செய்ய வந்தவர்கள் ஜெயலலிதா ஊழியம் செய்கின்றனர். எல்லா மதத்தலைவர்களும், மதக் குருக்களும் இப்போது தேர்ந்த வியாபாரிகளாகி விட்டனர். மடாலயங்களும் தேவாலயங்களும் வியாபார நிறுவனங்களாகி விட்டன. இறைவனுக்குத் தொண்டு செய்வது என்பது சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்வது என்றாகி விட்டது. அதற்கு தேவநேசம் ஒரு வெளிப்படையான உதாரணம். பெரியார் சரியாகத்தான் சொன்னார் 'கடவுளைப் பரப்புபவன் அயோக்கியன்' என்று.

தோழர். காளியப்பன்,
ம.க.இ.க. மாநில இணைச் செயலர்,
தஞ்சாவூர்.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05



# இதுதான் இன்றைய இந்தியா

வருடாவருடம் வந்து போகும் போலி சுதந்திர நாள் (ஆகஸ்டு - 15) - கொடியேற்றுவது, மிட்டாய் கொடுப்பது, இராணுவ - போலீசு அணிவகுப்பு, மாணவ-மாணவியரின் கலை நிகழ்ச்சி, பழம் பெருமை பேசுவது, தீவிரவாதத்திற்கு எதிராக வாய்ச் சவடால் அடிப்பது ஆகிய நிகழ்வுகளோடு மட்டும் தமிழகத்தில் முடிந்து விடுவதில்லை. வெள்ளையனை 'விரட்டிய' அதே நாளில், 'சாதியை விரட்டும் நோக்கத்தோடு' தமிழக அரசின் சார்பில், கோவில்களில் சமபந்தி விருந்தும் வருடா வருடம் நடத்தப்படும். இந்த ஆண்டு போலி சுதந்திர நாளில், சென்னை - ராயப்பேட்டையிலுள்ள சித்திபுத்தி விநாயகர் - சுந்தரேசுவரர் கோவிலில் நடந்த சமபந்தி விருந்துதான் இந்தப் படம்.

1981-ஆம் ஆண்டு மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்டோர் முசுலீமாக மாறியதால் ஆடிப் போன எம்.ஜி.ஆர்., தாழ்த்தப்பட்டோரை தாஜா செய்வதற்காக சமபந்தி விருந்தை அறிமுகப்படுத்தி முற்போக்கு வேடம் போட்டுக் கொண்டார். ஆனால், அவரது அரசியல் வாரிசு கழிசடை ஜெயாவுக்கோ இந்த முற்போக்கு வேடமெல்லாம் தேவையே படவில்லை. தாழ்த்தப்பட்டோர் தீண்டாமை கொடுமையில் இருந்து தப்பி ஓடிவிடக் கூடாது என்பதற்காகவே, அவர் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். ''நான் பாப்பாத்திதான்'' எனக் கூச்சநாச்சமில்லாமல் கூறிக் கொண்டவர் அவர். இந்தத் 'திராவிட' ஆட்சியின் ராஜகுரு பார்ப்பன காஞ்சி சங்கராச்சாரி. இப்படி வெளிப்படையாகவே பார்ப்பன சனாதன தர்மம் கோலோச்சும் ஆட்சியில், சாதி - தீண்டாமை பாகுபாடுகளை ஒழிப்பதற்காக சமபந்தி விருந்து நடத்தப்படுகிறது எனச் சொன்னால், அதை நம்புவதற்கு நாமென்ன இளிச்சவாயர்களா?

இதோ, இந்தப் படத்தில் நாம் காணும் பெரியவரின் பெயர் ராசு. இவர் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சொட்டதட்டி கிராமப் பஞ்சாயத்துத் தலைவர். 'சுதந்திர' தினத்தன்று தன்னை, முக்குலத்தோர் சாதியைச் சேர்ந்த சுப்பையா, சாதி பெயரைச் சொல்லித் திட்டி, ''நீயெல்லாம் என்னடா கொடி ஏத்தறது?'' என அவமானப்படுத்தி, செருப்பை வீசியெறிந்து தாக்கியதாக போலீசில் புகார் கொடுத்திருக்கிறார், ராசு.



பெரியவர் ராசுவின் மகன் சேங்கையின் இரண்டாவது மனைவி வேலுத்தாயை, முக்குலத்தோர் சாதியைச் சேர்ந்த மாரி, பாலியல் பலாத்காரப்படுத்த முயன்று இருக்கிறான். இதற்கு நியாயம் கேட்ட, சேங்கை வேலுத்தாயி இருவரையும் மாரியின் உறவினர்கள் அடித்திருக்கிறார்கள். இதையடுத்துதான், ராசுவை, மாரியின் உறவினரான சுப்பையா தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை விசாரணை செய்த சிவகங்கை மாவட்ட ஆட்சியாளர் சுப்பைய்யாவைக் கைது செய்ய உத்தரவிட்டிருக்கிறார். அதேசமயம், இந்த வன்கொடுமை தாக்குதலை, ராசு - சுப்பையா இருவருக்கும் இடையேயான பிரச்சினையாக அமுக்கிவிட முயற்சி செய்கிறார்.

அக்கிராம பஞ்சாயத்தின் துணைத் தலைவரான பத்மாவின் கணவர் குண்டுமலை, ''சுப்பையா ராசுவைச் செருப்பால் அடிக்கவில்லை. சேரை எடுத்துதான் அடித்தார்'' என்கிறார். மேலும், ''ராசு வெளி ஆளுங்களோட பேச்சை கேட்டு ஊரை எதிர்க்கிறார்'' எனக் குற்றம் சுமத்துகிறார். ஆக, தாழ்த்தப்பட்டவரான ராசு சுதந்திர தினத்தன்று மேல் சாதியைச் சேர்ந்த சுப்பையாவால் தாக்கப்பட்டார் என்பதும், மேல்சாதியினருக்கு அவர் கட்டுப்பட மறுக்கிறார் என்பதும் உண்மையாகி விட்டது.

ஒருபுறம், சமபந்தி விருந்து என்ற மோசடி நாடகம்; இன்னொருபுறமோ, மேல்சாதி வெறியர்கள் கட்டவிழ்த்து விடும் வன்கொடுமை தாக்குதல். தாழ்த்தப்பட்டவர்கள் வாயைத் திறப்பதற்குக் கூட ஆதிக்க சாதியினரின் அனுமதி வேண்டும் என்றால், இது வென்ன சுதந்திரம்? இப்படிப்பட்ட போலி சுதந்திரத்திற்கு கொண்டாட்டம்தான் ஒரு கேடா? ❑

படிப்பகம்